விலைரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 புரட்டாதி 25 முஹறம் 4 இதழ் 240
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 11-10 83

## ''வர்த்தகத் துறையில் பெரும்பான்மையினர் ஆதிக்கம்!''

### சென்னையில் வவனியா 'சிவா'

(சென்னை)

பொருளாதார வர்த்தகத் துறையில் பெரும்பான்மை இனத்தவரின் ஆதிக்கத்தை வலுப்படுத்த இலங்கை அரசு முயன்றுவருவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி துணைத்தலைவரும், முன்னாள் வவனியா எம். பி. யுமான திரு. த. சிவசிதம்பரம் நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்ததாக அகில இந்திய வானொலி தெரிவித்தது.

வவனியா தொகுதியில் மலையகத் தமிழர்களை பெருமளவில் குடியேற்றியதால் அரசு தன் மீது ஆத்திரமடைந்திருப்பதாகவும் காவல்துறையினரிடமிருந்து தப்பி நாட்டுப்படகொன்றிலேயே தமிழகம் வந்ததாகவும் திரு. சிவசிதம்பரம் தெரிவித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது. (கு)

## துப்பாக்கிமுனையில் 40,000 கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்துக்கு பொருட்களை ஏற்றிச்சென்ற லொறி, துப்பாக்கி இளைஞர்களால் கடத்தப்பட்டு 40 ஆயிரம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் ப. நோ. கூ. ச. வுக்குச்சொந்தமான லொறியே கடத்தப்பட்டு கொள்ளை அடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை ஊர்காவற்றுறை இறங்குதுறையடியில் இச்சம்பவம் நடைபெற்றது.

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகம்

# நேற்று இழுத்து மூடப்பட்டது!

## கட்சி உட்பூசல் காரணமா?

(நமது அரசியல் நிருபர்)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் தலை தூக்கிய நெருக்கடி காரணமாக, கட்சியின் தலைமை அலுவலகம் நேற்று இழுத்துமூடப்பட்டது! இத்திடீர் நடவடிக்கைக்கு 'அநுரா-விஜயா தலைமைப் பதவி' இழுபறியே காரணம் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை ரீதியிலான செயற்கமிட்டிக் கூட்டம் இம்மாதம் இரண்டாம் திகதி கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்; அநுரா-விஜயா இழுபறி உச்சக்கட்டததில் இருந்தபோதிலும் கூட்டத்தின் முடிவில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கே முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டு சுதந்திரமாக பல முடிவுகளையும் எடுக்கும் அதிகாரமும் அவருக்கு அளிக்கப்பட்டது.

இதன் எதிரொலியாகவே நேற்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, டார்லி வீதியிலுள்ள சுதந்திரக்கட்சியின் தலைமை அலுவலகத்துக்குச் சென்று கதவுகளை இழுத்து மூடிவிட்டதாகத் தெரிய வருகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். - கொழும்பு ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில்சேவை. இருதினங்களுக்கு ஒரு முறை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

கொழுமபிலிருந்து காலையில் புறப்படும்ரயில்நண்பகல்யாழ்ப்பாணம் வந்து அரைமணி நேரத்தில் கொழும்பு திரும்புகிறது.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே நடைபெறும் ரயில்சேவை நாட்கள் வருமாறு: (இன்று) செவ்வாய்க் கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை.

## பர்மா குண்டுவெடிப்பு: உலகத்தலைவர்கள் கண்டனம்

(சியோல்)

ரங்கூன் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலியான தென் கொரிய அமைச்சர்கள் உயர் அதிகாரிகளின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்து பல உலகத் தலைவர்கள் செய்திகளை அனுப்பியுள்ளனர்.

இச்சம்பவத்தை கண்டிக்கும் செய்திகளும் சியோலுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

### ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி

இச்சம்பவம் குறித்து பூர்வாங்க விசாரணை நடத்துவதற்காக தென் கொரிய விளையாட்டுத்துறை அமைச்சர் தலைமையிலான தூதுக்குழு ரங்கூன் பயணமானது. ஜனாதிபதி சுண்-டு-ஹுவானின் விசேட தூதுவராகவே அமைச்சர் அங்கு செல்கிறார்.

### இந்திரா கண்டனம்

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தென்-கொரிய ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் இச்சம்பவம் பெரும் அழிவைக் கொடுத்திருக்கிறது என்றும் இந்தியா வன்மையாகக் கண்டிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### 'கோழைத்தனமான செயல்'

''பயங்கரமான கோழைத்தனம் இது'' என்று இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தென்-கொரியாவில் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் இவ்வேளையில் ஜனாதிபதி சுண்-டு-ஹுவான், மக்களுக்கு புத்துணர்ச்சியளித்து தலைமையை நிலைநாட்டுவார் என்று நம்புவதாகவும் அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் மரணமா

(8-ம் பக்கம் பார்க்க)

## ''யாழ். நகரில் தொழிற்சாலைக்கு முன் அனுமதி பெறவேண்டும்''

### ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாநகரசபையிடம் முன் அனுமதி பெறுமல் புதிதாகத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதால் அப்பகுதியில் வாழும் மக்கள் பாதிப்படைகிறார்கள். ஆதலால் தொழிற்சாலைகளை ஆரம்பிக்குமுன்னர் முன் அனுமதி பெறவேண்டும்.''

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன் அனுமதி பெருமல் 'வெல்டிங்' தொழிற்சாலை மற்றும் மின்சாரம் தொடர்பான தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதால் அப்பகுதிகளில் ஏற்படும் மின்சாரப் பாதிப்பினுல், பொதுமக்கள் கஷ்டப்படுகிறுர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி பலர் புகார் செய்திருப்பதாகவும் மின்சாரம் தடைப்படுவதால் அல்லது குறைவதனுல் இரவில் மாணவர்கள் படிக்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன் அனுமதி பெருமல் தொழிற்சாலைகளுக்கான கட்டடங்களும் சில பகுதிகளில் கட்டப்பட்டுள்ளதாக புகார் கிடைத்திருப்பதாகவும் இது பற்றி விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் கட்டடங்களையும் முன் அனுமதி பெற்றே கட்டவேண்டும் என்றும் அவர் கூறினுர். (க)

## வங்கி ஊழியரை சீருடையில் வந்தவர்கள் தாக்கினுர்கள்!

### ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறுர்!!

[புலோலி)

ஆலயதரிசனத்தை முடித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வீடுதிரும்பிக் கொண்டிருந்த மக்கள் வங்கி ஊழியரொருவர் ஜீப்பில் வந்த சீருடை அணிந்தவர்களால் தாக்கப்பட்டார். அவர் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் கடமையாற்றும் திரு. வ. சிவச்சந்திரதேவன் என்பவரே சீருடை அணிந்தவர்களால் தாக்கப்பட்டவராவர். இவர் வல்லிபுர ஆழ்வாரைத் தரிசித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றது.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் திரு. சிவச்சந்திரதேவன் இதுசம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார். பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பல்கலைக்கழகங்களுக்கு 5,450 மாணவர்கள் அனுமதி

### புதிய கல்வியாண்டு ஜனவரி 2-ல்

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு இந்த ஆண்டு அனுமதி பெற்றுள்ள புதிய மாணவர்களுக்கான கல்வியாண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் 2ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் இம்மாதம் 24ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்னர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட புதியமாணவர்கள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் பல்கலைக்கழகங்களுக்கு 5,450 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட மாணவர்களிலும் 200 அதிகமாகும். கலைத்துறைக்கே கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பேராதனைப்பல்கலைக் கழகத்திற்கு 1, 250 பேரும், ஸ்ரீஜெயவர்த்தன பல்கலைக் கழகத்திற்கு 1, 000பேரும், கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு 925பேரும், களனி பல்கலைக்கழகத்திற்கு 750பேரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 740பேரும், எஞ்சிய மாணவர்கள் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கும், மட்டக்களப்பு, றுகுணைப் பல்கலைக் கழககல்லூரிகளுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வெ)

## உள்ளூர் துப்பாக்கியுடன் இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிமுனையில் கொள்ளை அடித்தது, கொலைசெய்ய முயற்சித்தது சம்பந்தமாக, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் வாலிபர் ஒருவரை சந்தேகத்தின்பேரில் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கொட்டடி சினிவாசகம் வீதியைச் சேர்ந்த இராமசாமி யோகசுந்தரம் அல்லது 'சி. ஐ. டி.' என்று அழைக்கப்படுபவரையே பொலிசார் கைதுசெய்தனர்.

ஒருமுள நீளமுள்ள இரும்புக் குளாய் பொருத்தப்பட்ட மரத்திலான துப்பாக்கி ஒன்றும் 12ம் நம்பர் தோட்டா ஒன்றும் கைத்துப்பாக்கிக்குப் பாவிக்கும் 4 துப்பாக்கி ரவைகள், பாவித்த வெற்றுத்தோட்டாக்கள் 2 ஆகியவையே சந்தேக நபரிடமிருந்து பொலிசாரால் கைப்பற்றப்பட்டவையாகும்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி இரவு யாழ். இந்துக் கல்லூரிக்கருகாமையில் உள்ள

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய் மருதடி விநாயகராலயத்துக்கு அருகாமையில் உள்ள 'கடத்தலானே' என்ற 7 பரப்பு, தனிக்கிணறு உள்ள புகையிலைத்தோட்டம் விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு: திருமதி காராளசிங்கம், நாவலடி ஒழுங்கை, மானிப்பாய். 9207

டெலிகா புதிய மொடல் வான் றேடியோவுடன் உன்னத நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. டெலிபோன் 22628, பாம்கோட், (PALM COURT) 202, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 9210

ஓமந்தையில் 20ஏக்கர் காணி தென்னை, மா, பலா பிரயோசனப் பயிர்கள் வீடு, இரண்டு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: பெரியதம்பி கனகரட்ணம், மூத்ததம்பி லேன், மானிப்பாய். 9208

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், சீமெந்துத் தொழிற்சாலை ஆகியவற்றுக்குஅண்மையில் 4 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. வேலுப்பிள்ளை (ரெயில்வே பென்சனியர்), வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பளை. 9194

ஈச்சமொட்டை வீதியில் வீடு கட்ட உகந்த 1½ பரப்புக்காணி மலிவு விலையில் உண்டு. விபரங்களுக்கு தொடர்புகொள்க: ச. சின்னப்பு, 12, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 9151

## குத்தகைக்கு

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைச் சந்தியில் எல்லாவித வசதிகளுடனும் ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கில வைத்தியசாலை குத்தகைக்கு கொடுக்கப்படும். எம். பி. பி. எஸ். வைத்திய கலாநிதிக்கு மிகவும் உகந்தது. உடன் தொடர்புகொள்ளவும். டாக்டர் ப. சண்முகநாதன், டிம்புல ரோட், ஹற்றன். (92, Dimbulla Road, Hatton.) 9176

## வாடகைக்கு

Austin Delivery Van வாடகைக்கு உண்டு. 2 தொன் பாரமேற்ற உகந்தது. உங்கள் தேவை எதுவாயினும் உடனே தொடர்பு கொள்ளவும். மே/பா விளம்பர இல: 9199, ஈழநாடு, யாழ்ப்பாணம். 9199

கே. கே. எஸ். வீதி, ஒளவையார் சிலைச்சந்திக்கு அண்மையில், உடன் ஹோட்டல் அல்லது வேறுவியாபாரம் செய்யக்கூடிய, தொலைபேசி, குழாய் நீர், மின்சார வசதிகளுடனுன கடை வாடகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23541. 9201

## சேவை

மணமகன் / மணமகள் சம்பந்தப்பட்ட திருமண சேவைக்கும், காணி, வீடுவளவு சம்பந்தப்பட்ட தரகு முகவர் சேவைக்கும் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்- மல்ரி சேவிசஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9202

தெல்லிப்பளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குபாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்களுக்கான நாளாந்த வாகனசேவை 13ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. உடன் தொடர்பு கொள்க. ஆயர்பாடி ஜோதிட நிலையம், மடத்தடி, தெல்லிப்பளை. 9191

கலர் பிலிம்ஸ் சுருள்களைச் சிறந்தமுறையில் Processing and Printing செய்துகொள்ள யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ருடியோவை நாடுங்கள். 9145

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற்கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9086

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

திருமதி பொற்கொடி ஆறுமுகம்
(மலாயன் பென்சனீயர், சங்கானை)

மலர்வு:
12-12-1893



உதிர்வு:
22-09-1982

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் எங்கள் உள்ளங்களில் என்றும் உங்கள் நினைவு அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

பிளாக் ரோட், சங்கானை. 9184

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் போக்குவரத்து நிறுவனம் ஒன்றிற்கு 10 வருட அனுபவமுடைய, நாற்பது வயதுக்கு மேற்பட்ட டீசல் மெக்கானிக் உடனடியாகத் தேவை. தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும். 20-10 83க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:9213, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9213

வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஒரு கணக்குப்பிள்ளை உடனடியாகத்தேவை. ஆங்கில அறிவு உள்ளவராயும், வரவுசெலவுக் கணக்குகள் எழுதக்கூடியவராயும், Final Accounts செய்யக் கூடியவராயும், வருமானவரி வேலைகளில் அனுபவமுள்ளவராயும் 35-45வயதுக்குள் இருப்பவராயும் இருத்தல் விரும்பத்தக்கது. முன் அனுபவங்களையும் தகைமைகளையும் குறித்து சொந்தக்கையெழுத்தில் 20ந் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 9146 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 9146

## பயிற்சி

Computer Programming (Basic-Cobol) Computer மொழிகளில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும். T. V. வீடியோ டெக் றிப்பியறிங் எலக்றிக்கல் வயறிங், Hotel management வெல்டிங், ஏயர் கொண்டிசனிங் சகல பயிற்சிகளிற்கும் இரண்டுமாத செய்முறைப் பயிற்சியளிக்கப்படும். மற்றும் Spoken English French உம் புதிய பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 14-10-83. விபரங்களிற்கு: The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9061

## WANTED

A business establishment in Jaffna requires an ideal clerk with English knowledge for EXPORT and IMPORT and connected wharf and customs clearing work. Age immaterial, should be able to handle all connectee correspondence in Englisd independently. Apply before 22-10-83 with bio-data and experience to Advertiser No. 9166 C/o Eelanadu, Jaffna. 9166

## மேற்படிப்புக்கு லண்டன் சென்றார்

(பண்டத்தரிப்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல்வைத்தியப் பிரிவில் விரிவுரையாளராகக் கடமையாற்றுபவரும், பண்ணுகத்தைச் சேர்ந்தவருமான திரு. தில்லையம்பலம் ஆனந்தமூர்த்தி பல்வைத்திய அறுவை சிகிச்சைபற்றிய மேற்படிப்பை மேற்கொள்ளுவதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தின் புலமைப் பரிசிலைப் பெற்றுக் கடந்தவாரம் பிரிட்டன் பயணமானார். இவர் அங்கு ஒரு வருடகாலம் தங்கியிருந்து பல்வைத்திய அறுவை பற்றிய பயிற்சியைப் பெறுவார். (அ)

## புதிய கி. உ. சபைத் தலைவர்

(மன்னார்)

மன்னார் மேற்குக் கிராமோதய சபையின் புதிய தலைவராக மன்னார் தொழில் அதிகாரியும் தலைமன்னார் துறை நலன்புரி அதிகாரியுமான திரு எம். சாக்கரியாஸ் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (க)

## யாழ். மாவட்டத்தில் 'திரிபோஷ' விநியோகம் இப்போது ஸ்தம்பிதம்!

(பண்டத்தரிப்பு)

கடந்த ஒருமாத காலமாக யாழ். மாவட்டத்தில் 'திரிபோஷ' இலவசமா விநியோகம் ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளது. இப் பகுதியிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நடைபெற்றுவரும் சிறுவர்நல சிகிச்சை நிலையங்களிலும், கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையங்களிலும் இலவசமாக வழங்கப்பட்டு வந்த ''திரிபோஷ'மா கடந்த ஒரு மாதமாக விநியோகிக்கப்படவில்லை. இதனால் ஏழைமக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளார்கள்.

வடபகுதி புகையிரதசேவை ரத்தானதை தொடர்ந்து கொழும்பிலிருந்து ரயில்மூலம் அனுராதபுரம் வரை இந்த திறிபோஷ மா கொண்டுவரப்பட்டது. யாழ். சுகாதார திணைக்கள லொறி மூலம் அங்கிருந்து இங்கு எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

ஆனல் இவ்வாறு தொடர்ந்தும் செய்வதற்கு லொறிகளுக்கான எரிபொருள் செலவீனத்தை தாங்கிக்கொள்ளமுடி

(7-ம் பக்கம் பார்க்க)

## மட்டுப்படுத்தப்பட்ட மாந்தை வடக்கு ப. நோ. கூ. சங்கம்-அடம்பன்

### பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர் பதவி தரம் III

மாந்தை வடக்கு ப நோ. கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளர் தரம் III பதவிக்கு 25-40 வயதிற்கிடைப்பட்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

நிபந்தனைகள், தகைமைகள், விண்ணப்பப்பத்திரம் போன்ற மேலதிக விபரங்கள் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் முத்திரையொட்டி சுய விலாசம் எழுதப்பட்ட தபால் உறைகளை அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 20-10-1983

தலைவர்
மாந்தை வடக்கு ப. நோ. கூ. சங்கம்,
அடம்பன்.

திகதி: 07-10-1983. 9209

## அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தில் 112ம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் சம்பந்தமாக

1. இராமுப்பிள்ளை இராசலிங்கம்
2. கார்த்திகேசர் இராசரத்தினம்
3. தம்பிப்பிள்ளை சங்கரசிவம்
4. இரத்தினம் சுந்தரலிங்கம்
5. வேலாயுதர் நவரத்தினம் எல்லோரும் தாவடி, கொக்குவில்

—மனுதாரர்கள்

வழக்கு இலக்கம்: ந. சொ. 5094

எதிராக

1. கணேசபிள்ளை நித்தியானந்தன், சங்கானை தற்போது அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் (சலுசலா) மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
2. பொன்னுத்துரை மதிமுகராசா, உபதபாற்கந்தோர் அருகாமை சுதுமலை ரோட், தாவடி, கொக்குவில்

—எதிர்வாதிகள்

தாவடி, பிரகசுந்தர குஸாம்பிகா சமேத ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோவில் என்றழைக்கப்படும்கோவிலுக்குச் சொந்தமானதெனவும், அக்கோவிலுக்குரிய சொத்துக்களில் ஒன்று எனவும் அவ்வாறுன சொத்துக்களில் ஒன்றென்ற முறையில் இதன்பின் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை அக்கோவிலின் தற்போதைய தருமகர்த்தாக்கள் என்றமுறையில் மேற்சொல்லப்பட்ட மனுதாரர்கள் குறித்த தருமகர்த்தாக்கள்சபையிடம் ஒப்படைக்கும் ஒரு ஒப்படைக்கட்டளை (Vesting Order) கோரி இந்நீதி மன்றத்திற்கு நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தின் 112ம் பிரிவின் பிரமாணங்களுக்கு அமைய இந்நீதி மன்றத்திற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

அவ்வாறுன ஒப்படைக் கட்டளை வழங்கப்படுவதற்கு முன்னேடியாக குறித்த விண்ணப்பம் சம்பந்தமாக பகிரங்கமாக அறிவிக்கப்படவேண்டுமென நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளபடியாலும்,

இத்தால் சகலரும் அறியவேண்டியது மேற்படி தாவடி பிரகசுந்தர குஸாம்பிகா சமேத ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோவிலுக்குச் சொந்தமான ஆதனமென்ற வகையில் இதன்பின் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை அக்கோவிலின் தருமகர்த்தாக்கள் சபையிடம் ஒப்படைக்கும் ஒப்படைக் கட்டளை கோரியபடி ஏன் வழங்கப்படலாகாதுஎன்பதற்கு ஏதும்எதிர்க்காரணம் இருப்பின் குறித்த தருமசாதனத்தின்மீது அக்கறையுள்ள ஆள் எவரேனும் இந்நீதி மன்றத்தில் தோன்றி 26-10-1983ம் ஆண்டு அல்லது அதற்கு முன்போ தெரிவிக்கலாம் என இத்தால் அறிவிக்கப்படுகிறுர்கள்.

1983ம் ஆண்டு புரட்டாதி மாதம், 28ந் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

### மேற்சொல்லப்பட்ட ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவில்பற்று தாவடி இறை ''கலியன் சீமாவும் வறுத்தலையடியும் மறுபிரிவுகளும்'' நிலப்பாப்பு பன்னிரண்டு (நி.பர 12) அதனுள்ளிருக்கும் சட்டடங்களும் கிணறும் பயிர்வகைகளும், எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு இராசையா சோதிநாதனுக்கும் மனைவிக்குமுரிய ஆதனமும் ஒழுங்கையும், மேற்கு இராசையா சோதிநாதனுக்கும் கணேசபிள்ளை பெண் தையல்நாயகிக்கும் உரியவாதனங்கள் இதடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

தயாரித்தது
க. குணரத்தினம், மனுதாரர்களின் சட்டத்தரணி.

(9211)

# ரங்கூன் படுகொலைகள் வடகொரியாவின் செயலே’

## தென் கொரிய ஜனதிபதி கண்டனம்

# 23 பேர் பலி; 48 பேர் காயம்

சியோல், அக். 10

**‘‘ரங்கூனில் இடம் பெற்ற படுகொலைகள் வடகொரியாவின் செயலே என்று தென் கொரிய ஜனதிபதி சுன்-டு-ஹுவான் வெளிப் படையாகத் தெரிவித் துள்ளார்.**

ரங்கூனில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை யடுத்து தனது ஆறு நாடு களுக்கான விஜயத்தை ரத்துச் செய்து விட்டு, உடனடியாகத் திரும்பிய தென்கொரிய ஜதி பதி சுன்-டு-ஹுவான் அங்கு நிருபர்களிடம். இவ்வாறு தெரிவித்தார்.

### 23 பேர் பலி! 48 பேர் காயம்

இக் குண்டுவெடிப்புச் சம்ப வத்தினுல் நான்கு தென் கொரிய அமைச்சர்களும், 16 தென்கொரியர்களும், 3 பர்மியர்களும் பலியானதாக வும், 48 பேர் காயமடைந்த தாகவும பர்மிய அரசாங்கம் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

தாயகம்திரும்பிய தென் கொரிய ஜனதிபதி நேற்று உடனடியாக அமைச்சரவை யின் அவசரகூட்டத்தைக் கூட்டினர்,

### தென்கொரியாவில் சோகம்

இச்சம்பவத்தையடுத்து தென்கொரியா சோகக்கடலில் மூழ்கியுள்ளது. தேசியக்கொடி கள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. உயிரிழந்த அமைச்சர்களின் மரணச்சடங் குகள் அரசமரியாதைகளுடன் நடைபெறவுள்ளதாக அறிவிக் விக்கப்பட்டுள்ளது.

### சடலங்களை ஏற்றிவர விமானங்கள்

உயிரிழந்தவர்களின் சடலங் களை ஏற்றிவர விமானங்கள் பர்மாவிற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

தென்கொரிய ஜனதிபதி தமது ஆறுநாடுகளுக்கான விஜயத்தின் முதல் கட்டமாக பர்மா சென்றிருந்தபோதே இக்குண்டு வெடிப்புச்சம்பவம் இடம்பெற்றது.

### உயிருக்கு உலை வைப்பதே நோக்கம்

‘‘இக் குண்டுவெடிப்புச் சம் பவத்தின் நோக்கம் தமது உயிருக்கு உலைவைப்பதே’’ என்று தென்கொரியா ஜனதி பதி நிருபர்களிடம் தெரிவித் துள்ளார்.

### இந்தியா கவலை

இக்குண்டு வெடிப்புச்சம் பவத்தில் தென்கொரியஅமைச் சர்களும், அதிகாரிகளும் பலி யானது குறித்து இந்தியா கவலையும் அதிர்ச்சியும் தெரி வித்துள்ளது. (வெ)

---

## கி. ஆ. பெ. 85வது பிறந்ததினம்

சென்னை, அக். 10

தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதனின் 85வது பிறந்த தினம் நேற்றுச் சேலத்தில் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. ஆர். நெடுஞ்செழியன் வெள்ளிக்கேடய மொன்றை அன்பளிப்பாக திரு. விசுவநாத னுக்கு வழங்கினர்.

அருள்மொழியரசு கிருபா னந்தவாரியார், நாடகக்கலை ஞரும், நடிகருமான திரு. ஆர். எஸ். மனேகர் உட்பட 42 அறிஞர்களுக்கு திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் சான்றிதழ் களை வழங்கினர். (வெ)

---

## ‘‘கிராம மூலவளங்கள் மூலம் கைத்தொழில் துறைகளை உருவாக்க வேண்டும்’’

(புலோலி)

‘‘கிராமந்தோறும் கிடைக் கும் மூலவளங்களைப் பயன் படுத்திக் கைத்தொழிற் துறை களை உருவாக்க வேண்டும். இதன்மூலம் கிராமிய மக்களு க்கு வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதுடன் பொருளாதார மேம்பாட்டை யும் அடையமுடியும்.’’

இவ்வாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமா ஜப் செயலாளர் திரு சி. சி. வரதராசா அல்லைப் பிட்டி சென். பிலிப்ஸ் சனசமூக நிலை யத்தின் பதினேராவது ஆண்டு விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசுகை யில் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. நீ. தொபியாஸ் தலைமையில் இவ் வாண்டு விழா நடைபெற்றது. திரு. வரதராசா தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:-

‘‘சனசமூக நிலையங்கள் கிரா மிய மக்களின் வாழ்க்கைமேம் பாட்டிற்கான நடவடிக்கை களில் ஈடுபடவேண்டியது அவ சியம். கிராமங்கள் முன்னேறு வதன் மூலம்தான் கிராமிய மக் களின் வாழ்க்கைத் தரமும் உயரமுடியும். சனசமூக நிலை யங்கள் பெயரளவில் மட்டும் இயங்காது உண்மையான சேவைகளை மக்களுக்குச் செய்ய முன்வரவேண்டும்.

அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டி அவற்றை இளம் வாலி பர்கள், பெண்களின் ஒத் துழைப்புடன் செயற்படுத்த வேண்டும். சிரமதானம்மூலம் பல கிராமப் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு கிரா மத் தேவைகளை ஓரளவாவது நிறைவுசெய்யமுடியும். இச்சன சமூக நிலையம் பதினேராவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது சாதனையே யாகும். இதற்கு இக்கிராம மக் களின் ஒத்துழைப்பும், சேவை மனப்பான்மையுமே காரண மாகும்.’’

---

# ‘‘அணுசக்தி ஏவுகணை உற்பத்தியை மட்டுப்படுத்துவது பற்றி சோவியத்துடன் பேசுவேன்’

## ஜனதிபதி றீகன் அறிவிப்பு

வாஷிங்டன், அக். 10

‘‘நீண்டதூர அணுசக்தி ஏவு கணைகளின் உற்பத்தியைமட் டுப்படுத்துவது தொடர்பாகச் சோவியத் ஜனதிபதி திரு. யூரி அந்ரபோவ்வுடன் பேச்சுவார்த் தைகளை மீண்டும் நடத்தப் போகிறேன்.’’

இவ்வாறு அமெரிக்க ஜனதி பதி திரு. றெனல்ட் றீகன் வாஷிங்டனில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமெரிக் காவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் எண்ணம் தமக்கு இல்லையென்று சோவியத் ஜனதிபதி தெரிவித்துள்ளதாக அமெரிக்கப் பேராசிரியர் ஒரு வர் கருத்து வெளியிட்டுள் ளார்.

இப்பேச்சுவார்த்தையினுல் எந்தவித பயனும் ஏற்படா தென்று சோவியத் யூனியன் கருதுவதாக அரசியல் அவ தானிகள் தெரிவித்துள்ளனர். (வெ)

---

## பொதுநலவாய அமைப்பு மகாநாடு:

# அடுத்த மாதம் புதுடில்லியில் ஆரம்பம்

புதுடில்லி, அக். 10

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மகா நாடு அடுத்தமாதம் புதுடில்லி யில் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டிற்கான ஒழுங் குகளை மேற்கொள்ளும் பொருட்டு பொதுநலவாய அமைப்பு நாடுகளின் செயலா ளர் திரு. சிறீதத்றம்பால் புது டில்லி வந்துள்ளார்.

இவர் அங்கு ஒருவாரம் தங்கி மகாநாட்டிற்கான அலு வல்களைக் கவனிப்பதுடன், இந் தியப் பிரதமர் திருமதி இந் திரா காந்தி, வெளிநாட்ட மைச்சர் திரு. பி. வி. நரசிம்ம ராவ் ஆகியோரைச் சந்தித்து பல்வேறு உலக விவகாரங்கள் குறித்தும் கலந்துரையாடவுள் ளார். (வெ)

---

# பாக். தேர்தலை நடத்தும்படி எதிர்க்கட்சிகள் கோரிக்கை

இஸ்லாமாபாத், அக். 10

பாகிஸ்தானில் இராணுவச் சட்டத்தை நீக்கும்படியும், 1973ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் அங்கு டிசம்பர் மாதம் பொதுத் தேர்தலை நடத்தும் படியும் ஜனதிபதி ஷியா-வுல்-ஹக்கிடம் எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடத்தும்பொருட்டு பாகிஸ்தான் எதிர்க்கட்சித்தலை வர் ஒருவரும், 5 உறுப்பினர் களும் ஜனதிபதி ஹக்கைச் சந் திக்கவுள்ளனர்.

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார் த்தை நடத்தத் தயாராகவுள் ளதாகவும், வன்செயல்களில் ஈடுபடுபவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தமுடியாது என்றும் ஷியா-வுல்-ஹக் தெரி வித்துள்ளார்.

பாகிஸ்தானின் தென் மாகா ணத்தில் ஜனதிபதி ஹக்கின் ஆட்சிக்கெதிராகத் தொடர்ந் தும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுவருகின்றன. (வெ)

---

# ‘ஒரு வீட்டில் ஒருவருக்காவது வேலை வழங்கப்பட வேண்டும்’

## தமிழக அரசின் திட்டம்பற்றி எம்.ஜி.ஆர்.

(திருச்சி)

‘‘ஒரு வீட்டில் ஒருவருக்குக் கூட வேலை இல்லாவிட்டால் அந்தவீட்டில் எப்படி மகிழ்ச் சியாக இருக்க முடியும்? அதற் குத்தான் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைத்திட்டத்தைக் கொண்டு வருகிறேன். எதிர்க்கட்சியினர் இதனை ‘‘அரசியல் ஸ்ரண்ட்’ என்றும் ‘தப்’ என்றும் சொல் கின்றனர். ஆனல் செய்து காட்டுவேன்’’

இவ்வாறு திருச்சியில் நடந்த அ.தி.மு.க. கூட்டமொன்றில் தமிழகமுதல்வர் எம். ஜி. ஆர். பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

நான் முன்பு ஜாலியாக இருந்தேன். ஜாலியாக இருந் தேன் என்ருல் அப்போது என் இஷ்டப்படி வேலைக்கு போ வேன். நடிப்பேன். முடியா விட்டால் ‘‘கேன்சல்’’ செய் வேன். யாரும் என்னை கட்டுப் படுத்த முடியாது.

ஆனல் இன்று கட்சிக்காரர் கள் இத்தனை மணிக்கு இங்கு விழா வந்து தீர வேண்டும் என்ருல் சரி என்று கூறி, அந்த நேரத்தில் ஓடி வருகிறேன். இதுதான் எனக்கு மன மகிழ்ச் சியை அளிக்கிறது.

‘‘மாணவர்கள் குழந்தை பருவத்தில் ஆரோக்கியத் துடன் இருந்தால்தான் இளை ஞனக ஆகும் போது நல்ல நிலையில் இருக்க முடியும். எனவேதான் சத்துணவு திட் டத்தை நிறைவேற்றி வருகி ருேம்.

வெளிநாடுகளில் குழந்தை களை பள்ளிக் கூடத்துக்கு அனுப்பாவிட்டால் அந்த பிள்ளைகளின் தாய் - தந்தை யருக்கு தண்டனை அளிக்கப் படுகிறது அந்தஅளவுக்கு கல்வி யில் அக்கறை செலுத்துகிருர் கள்.

‘‘ஆகவே குழந்தைகளை பள் ளிக் கூடத்துக்கு அனுப்பித் தான் தீரவேண்டும் என்ற நிலைக்கு பெற்ருேர் வரவேண் டும்.

‘‘ஒரு வீட்டில் ஒருவருக்கு கூட வேலையில்லாவிட்டால் அந்த வீட்டில் எப்படிமகிழ்ச்சி இருக்கமுடியும்? அதற்குத் தான் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைத்திட்டத்தை கொண்டு வந்திருக்கிருேம்.

‘‘உடனே இது ‘‘அரசியல் ஸ்டண்ட்’’ என்றும், ‘டூப்’ என்றும் எங்கே நடக்கப்போகி றது என்றும் எதிர்க்கட்சி யினர் கூறினுர்கள்.

‘‘இப்படித்தான் சத்துணவு- தன்னிறைவு திட்டங்களை கேலி செய்தார்கள். ஆனல்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## அடம்பன் ஆஸ்பத்திரிக்கு மின்சாரம்

(மன்னர்)

மன்னர் எம்.பி யின் பன்முக வரவு செலவுத் திட்ட நிதியுத வியுடனும், பொதுமக்களின் நிதியுதவியுடனும் அடம்பன் அரசினர் வைத்தியசாலைக்கு 80 ஆயிரம் ரூபா செலவில் மின் சாரம் வழங்கப்படும்.

இதற்கென மன்னர் எம்.பி திரு பி.எஸ்.சூசைதாசன் பன் முக வரவு செலவுத்திட்ட நிதி யிலிருந்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந் நிதியைக் கொண்டு அட ம்பன் அரசினர்வைத்தியசாலைக் கென ஜெனரேட்டர் ஒன்று கொள்முதல் செய்யப்படும்.

அடம்பன் பகுதி பொதுமக் களால் வழங்கப்பட்டுள்ள 30 ஆயியம்ரூபா நிதியைகொண்டு வைத்தியசாலைக்கான மின்சார இணைப்புவேலைகள் மேற்கொள் ளப்படும்.

---

## கடல் பூங்கா

சென்னை, அக். 10

மன்னர் வளைகுடாப் பகுதி யில் தேசிய கடல் பூங்கா வொன்று அமைக்கும் திட்டம் பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருவதாக தமிழ்நாடு மாநில வனத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தெரிவித் தார். (வெ)

---

## நவராத்திரி விழா

(பண்டத்தரிப்பு)

மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தில் நவராத்திரி விழா கடந்த 7ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றது. எதிர்வரும் 16ம் திகதி யன்று சரஸ்வதிப் பூசையும் மரம்நாட்டு வைமவமும் சிறப் பாக நடைபெறவுள்ளது.

## மணிவாக்கு

தம்முன்னேரின் சாதனைகளைப் பின் நோக்கிப் புரிய முடியாத மக்கள் தமது பிற்சந்ததியாருக்கு அளிக்க செல்வம் ஏதுமில்லாதவர்களே!

—எட்மண்ட் பேர்க்

# நமது நோக்கு

## வறுமையில் ஒருமை

ஆடிமாதக்குழப்பத்தால் ஏற்பட்ட நெருக்கடி மக்களின் பொது எதிரியான வறுமையை சற்றே மறக்கச் செய்தது; எந்தத்துன்பத்திலும் நன்மை இல்லாமல் இல்லை. ஆனுல் பசி நிரந்தரமாக மறக்கக் கூடியபொருள் அல்ல.

நாட்டின் பொருளாதாரத்தின் உண்மைநிலை அத்துறையில் நிபுணத்துவம் உடையவர்களுக்கே நன்ருக விளங்கும். வருகிறமாதம் 16-ம் தேதி வெளியாகவிருக்கும் வரவு செலவுத் திட்டம் மிகக் காரமாயிருக்கு மென்றும் துண்டு விழும் தொகை சுமார் தொளாயிரம் கோடியென்றும் ஏற்கனவே எச்சரித்திருக்கிறுர் நிதி அமைச்சர்.

சாதாரண பிரஜைக்கு இதன் அர்த்தம் சரியாகப் புரியாது; நாடு கடன்பட்ட சீவியத்தில் தொடர்கின்றதே என்ருலும் அதன் விளைவு நேரடியாகப் பாதிக்காத பட்சத்தில் வரவு செலவுத்திட்டங்கள் வரலாம் போகலாம் நாம் எங்கள் வறுமை நிலையில் தொடர்வது எம்தலை எழுத்தென்று முணுமுணுப்பது இயல்பு.

இன்று நடந்தேறிய இனக் கலவரம், நகரமக்களுக்கு மட்டுமல்ல, கிராமவாசிகளுக்கும் உணர்த்திய உண்மை வேருென்று,

கொலையால் தாக்குண்ட மக்களுக்கு கொள்ளையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க அவகாசம் இருக்கவில்லை. நாம் முன்னெருமுறை வினவியது போல் இன்றைய கொள்ளை எதனைக்குறிக்கின்றது?

கடந்தகலவரத்தில் மட்டுமல்ல; நாட்டில் பரவலாக, எங்கள் தமிழ்ப்பிரதேசங்களில் சிறப்பாக பெருகிவரும் கொள்ளைகள் வறுமையால் வாடும் மக்கள் புரியும் குற்றச் செயல்கள் அல்ல; செல்வந்தர்களின் செல்வம் அதிகரித்திருக்கிறது; வறியவர்களின் வறுமை எட்டிப் பிடிக்க முடியாத தூரத்தில் காணப்படுகிறது.

செல்வர்களின் அலங்கார உடை நடை பாவனை, அதற்கு வழியற்றவர்களின் கவனத்தை ஈர்க்கின்றதுஅரசின் தாராள பொருளாதாரக் கொள்கையில் செழிப்புறும் செல்வர்கள், லட்சாதிபதிகள், கோடீஸ்வரர்கள்அதற்குரிய முறையில் டாம்பீக வாழ்வு வாழ்கின்றனர். அதில் ஒரு பகுதியை கொள்ளைக்காரர் அபகரிக்க முயல்வது இன்று சர்வசாதாரணம். கடந்த கலவரத்தில் நடைபெற்ற நாடகக் காட்சிகளை நாம் மீண்டும் நடித்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை; கொள்ளையடிக்கப்பட்ட பல ஆடம்பரப் பொருட்கள் வெளிச்சந்தையில் அரை விலைக்கு, கால் விலைக்கு விற்கப்படும்காட்சிகள் இன்றும் காணப்படுகின்றன.

எம்மை வாசகர்கள் தவருகப் புரிதல் தர்மமல்ல; கொள்ளை கொடுத்தவர்களையும், கொள்ளை அடித்தவர்களையும் நாம் சற்றே மறந்து என்றும் கொள்ளையில் ஈடுபடாத சாதாரண ஒழுக்கமுடைய, கொள்ளைக்கிடமளிக்காத, மனிதரின் இன்றைய கதி என்ன? இதுவே எமது கேள்வி.

இன்றைய உழைப்பு, அரசாங்கத்துறை, தனியார்துறை, எதுவாகிலும் கிடைக்கும் ஊதியம் உயிர் வாழ இடமளிக்கின்றதா?

ரூபாயின் விலைமதிப்பு இறங்கியதால் நாளுக்கு நாள் பாவனையாளர் என்ற வர்க்கம் பிச்சை எடுக்கும் நிலையை அணுகிவருகிறது.

இதனைக் கண்ணுற்றும் எங்கள் பொருளாதாரம், வேலைவாய்ப்பு, தொழிற் பெருக்கம், உணவு உற்பத்தி—இவை யாவும்திறந்த பொருளாதாரத்தில் வளர்ச்சியடைகின்றன என்ற பிரசாரம் மிகப் போலியானதென்றே கொள்ள வேண்டும்.

வருகிற வரவு செலவுத் திட்டத்தில் வரிகள் அதிகரிக்கப்படுமென்பது ஒரு புதினமல்ல; அரை வயிற்றுக்கும் உழைக்க முடியாத ஏழைகளின் நிலை உயர கடன்படும் தொகை எவ்வாறு பங்கிடப் படுமென்பதே எமது விசனம்.

இனக்கலவரம்மறுதலிக்குமோவென்ற அச்சத்திலும் மோசமானது வறுமையில் ஒற்றுமைப்பட்ட பட்டினிப் படையின் கொந்தளிப்பு எவ்வாறிருக்குமென்பதே!

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை - கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா இன்று நடைபெறுகிறது. காலை 6 மணி முதல் 10 மணிவரை மகா சங்காபிஷேகம் நடக்கும். பகல் அன்னதானமும் மாலை பக்திப் பாடலும் இடம்பெறும். பக்திப் பாடல் அரசு ஏ. ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி குழுவினரின் சங்கீத நிகழ்ச்சி இடம் பெறும்.

## அனுராதபுரத்தில் நவராத்திரி

(சாவகச்சேரி)

அனுராதபுரம்விவேகானந்த சபை சாரதாதேவிபாலர் பாடசாலையில் இம்மாதம் 13ம் திகதி நவராத்திரியும் கலைவிழாவும் நடைபெறவுள்ளது.

விழாவில் பாலர் பாடசாலைச் சிறுவர்,சிறுமியர்களின் பாடல் நடனம் என்பன இடம்பெறும்.

★ அமெரிக்க அமைச்சரின் இலங்கை விஜயம்:

# ஸ்தானிகர் சட்வாலே டில்லிக்கு

## அவசரமாக இந்திரா அழைத்தார்!

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு. எஸ். ஜே. எஸ். சட்வால் அவசரமாக பிரதமர் திருமதி இந்திரா காந்தியால் டில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

திருமதி காந்தி ஐ.நா. சபைக்குச் சென்று திரும்பிய உடனேயே இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகரை ஆலோசனைக்கு அழைத்திருப்பது, இலங்கைப் பிரச்னையில் அவர்கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது.

இலங்கைக்கு அண்மையில் அமெரிக்க அமைச்சர் திரு. வெயின் பேக்கர் திடீர் விஜயம் மேற்கொண்டு, இலங்கை ஜனதிபதியைச் சந்தித்துப் பேசியிருப்பது பற்றியும், அதற்கு முன்னர் திரு. சட்வால் இலங்கை ஜனதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றியும் அவர் இந்திரா காந்திக்கு எடுத்து விளக்குவார்.

இதேசமயம் இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி இம் மாத பிற்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளார். அவர் வருகைக்கான திகதிகள் இந்திய ஸ்தானிகரின் பேச்சுவார்த்தைகளையடுத்து அறிவிக்கப்படலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

அண்மையில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. வெயின் இலங்கைக்கு விஜயம் செய்ததையொட்டி இந்தியப் பத்திரிகைகள் காரசாரமான கருத்துக்களை வெளியிட்ட போதிலும், அவை இந்திய அரசின் கருத்துக்களாக அமைய மாட்டாதெனக் கருதப்படுகின்றது.

இதே சமயம், தற்போது ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவரும் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. பார்த்தசாரதி இலங்கை வருவதற்கு முன்னரே அவர் புதுடில்லி வந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம், திரு. அமிர்தலிங்கம் இலங்கை வருவாரென்பது சரியாகத் தெரியவில்லை.

# மக்கள் கருத்து

## ஐ. சி. எம். ஏ. பரீட்சையும் தமிழ் மாணவரும்

1—10—83ல் வெளியான தங்கள் பத்திரிகையில் ஐ. சி. எம். ஏ. கற்கும் தமிழ் மாணவர்களுடைய குறைபாடுபற்றி எஸ். பெனடிக்ற் என்பவரால் எடுத்துக் கூறப்பட்டிருந்தது. உண்மையில் ஐ. சி. எம். ஏ. கற்கும் தமிழ் மாணவர் ஓர் அரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள் என்றுதான் கூற வேண்டும். ஏனெனில் அண்மையில் வன்செயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் குறைபாடுகள் பற்றி அறிவதற்காக அகதிகளுக்கான அத்தியாவசிய சேவை ஆணையாளர் அவர்கள் கடந்த மாதம் யாழ்ப்பாணம் விஜயம் செய்தார். அவரிடம் கூறப்பட்ட விடயங்கள் அனேகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன் பலனுகவே மற்றத் துறைகளைச் சேர்ந்த மாணவர்களின் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஐ. சி. எம். ஏ. (வன்செயலால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட) கற்கும் தமிழ் மாணவர்களும் அன்று ஓர் குழுவாக அல்லது அமைப்பாக சென்று அவரிடம் தமது இக்கட்டான நிலையை விளக்கியிருந்தால் பலன்கிடைத்திருக்கும். இலங்கைப்பரீட்சை பகுதியினரின் அனுசரணையுடன்ஐ.சி.எம்.ஏ. பரீட்சை நடைபெறுவதால் அவர் பரீட்சைபகுதி ஆணையாளருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்திருப்பார். ஆனுல் இன்னும் காலம்கடந்துவிடவில்லை. ஐ. சி. எம். ஏ. மாணவர் ஓர் அமைப்பாக அரசாங்க அதிபரிடம் தொடர்புகொண்டு அவர்மூலமாக அகதிகளுக்கான அத்தியாவசிய ஆணையாளர் திரு. பிரட்மன் வீரக்கோன் மூலமாக நடவடிக்கை எடுப்பதே சிறந்தவழி.

பி. இராசலிங்கம்

சங்கானை.

# எரிச்சலும் எரித்தலும்

எரிச்சல் பரிணமம்பெற்று எரித்தலாகி ஒருகாலத்தில் மனைகளும் கடைகளும் விளங்கிய ஸ்தலங்களை மயானபூமியாக்கி விட்டுள்ள தருணம் இது.

குறிப்பிட்ட ஒரு இனம் குறிப்பிட்ட சில துறைகளில் நிலைநாட்டிய 'ஏகபோக'த்தைத் தகர்ப்பதற்காக ஏவிவிடப்பட்டதாகக் கூறப்படும் எரிசரம் சாதித்த 'சாதனை'களையிட்டு, அந்த எரிசரத்தை விடுத்தவர்கள் பரிபூரண திருப்தி அடைந்தார்களோ இல்லையோ, இந்த எரிச்சலும் எரித்தலும் காலந்தோறும் நம்முடன் கூடவந்த விஷயங்களாகவே படுகின்றன

எரித்தலென்றதும் நம்மனத்திரையில் நிழலாடுவது முன்னெரு தருணம் நவீன அனுமார்கள் சிலரது எரிச்சலுக்கும் எரித்தலுக்கும் இரையாகிப்போன யாழ். நூலகத்து நூல்களே.

நூல்களை வாசிப்பதிலன்றி, அவற்றை எரிப்பதிலேயே இன்பம் கண்ட பலர் காலந்தோறும் இருந்து வருகின்றனர்.

பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் அலெக்ஸாண்டிரியாவைக் கைப்பற்றிய முதவாவது உமர் ''நூலகங்களை எரித்துத் தள்ளுங்கள்! அவற்றில் அடங்கியுள்ள பெறுமானம் எல்லாம் இந்த ஒன்றில் குர்-ஆனில் உள்ளது!'' என ஆக்ஞை பிறப்பித்தான்.

''ஒரு நூலாசிரியரின் நூல்களை எரிப்பது அறியாமை அரசோச்சும் ஒரு காலகட்டம் அதில் தோன்றிய மேதைக்கு செலுத்தும் அஞ்சலிக்குச் சமமானதாகும்'' என வால்டாயரின் சரிதத்தை எழுதுகையில் ஜோசப் லூயிஸ் கூடார்த் தமாகக் குறிப்பிட்ட பொழுதிலும், சிலமதகுருமார்கள் கூட நூல் எரிப்பு வேலையில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கின்றனர். கலிலியோ, பொக்காஸியோ, கல்வின், லூதர் போன்ருேரின் நூல்கள் மத குருமாரால் எரிக்கப்பட்டன. எமதுகாலப் பேரறிஞர் பேட்ரண்ட் றஸலின், 'ஏன் நான் ஒரு கிறிஸ்தவனுயில்லை? என்ற நூல் இங்கிலாந்தின் பலபகுதிகளிலும் கத்தோலிக்க குருமார்களால் எரிக்கப்பட்டமை ஓர் அண்மைக்கால உதாரணமாகும்.

1975ல் அமெரிக்காவில் சிரேஷ்ட வகுப்புகளுக்கான நூலொன்ருகச் சிபார்சு செய்யப்பட்ட கேர்ட் வொனேகட்டின் 'கசாப்புக்கடை-5' என்ற நூல் 'கம்யூனிஸ் தொனிப் பொருள்களைக் கொண்டது' எனசில ஆளும் வட்டார பிரமுகர்களுக்கு 'ஞானம்' பிறந்ததைத்தொடர்ந்து நாடுமுழுவதிலும் எரிக்கப்பட்டது. இதற்குச் சூடுபோடும் விதத்தில் இதே நூலாசிரியர் எழுதிய 'ஃபரனேட் 451' என்ற நூலும் திக்கிரையாக்கப்பட்டது. ஃபரனேட் 451 பாகை உஷ்ணத்தில்தான் கடுதாசி தீப்பிடித்து எரியும்!

நூல் எரிப்பில் சாதனை புரிந்தவர் ஹிட்லர்தான். அவர் அடக்கமாட்டாத எரிச்சலுடன் பிறெக்ற், மார்க்ஸ், லெனின் போன்ருேரின் நூல்களை மட்டுமன்றி, பைபிள் உட்பட பல மத இலக்கியங்களையும் மலை போல் குவித்து வைத்து எரித்துத் தள்ளினுர்!

எரிச்சலும் எரித்தலும் தாம் விடும் 'கயிறு'களைத் திரிப்பதற்கு நூல்களையே பிரதான சாதனமாகப் பயன்படுத்தும் இடதுசாரிகளைக்கூட விட்டு வைக்கவில்லை! ஸ்தாலின்,மாஓ ஆகியோரின் நூல்களை எரிப்பதில் ரொட்ஸ்கிவாதில் இன்பம் கண்ட அதேவேளையில் 'நவீன ஸார் பிரெஷ்னேவ்'வின் படங்களையும் நூல்களையும் சுட்டுப் பொசுக்குவதில் மாஓயிஸ்டுகள் திருப்திகண்டனர்!

லிபியாவின் தலைவிதியை தன்தோளில் தங்கியுள்ள கேர்னர் கடாஃபி கூட ஒருதடவை 'லா ஸ்டாம்பா' என்ற இத்தாலிய பத்திரிகை தன்னைக் கிண்டல்செய்யும் கார்ட்டூன் ஒன்றைப் பிரசுரித்தது கண்டு குறிப்பிட்ட அந்த இதழின் ஆயிரம் பிரதிகளை விமான மூலம்அழைப்பித்து, அவற்றை எரித்துத்தள்ளி தனது எரிச்சலைத் தணித்துக்கொண்டாராம். எரிச்சலும், எரித்தலும் யாரைத்தான் விட்டுவைத்தன?

எதையாவது எரித்தால்தான் எரிச்சல் தீரும் என்ற அரிப்பு

[5ம் பக்கம் பார்க்க]

## நவராத்திரி

வீரம் வேண்டித் துர்க்கைக்கும்
செல்வம் வேண்டித் திருமகட்கும்
கல்வி வேண்டி சரஸ்வதிக்கும்
கனிந்து வணக்கம் செய்வோமே.

★

அல்லல் நீங்கும் சக்தியினுல்
அமைதி தோன்றும் சக்தியினுல்
நல்ல தோன்றும் சக்தியினுல்
நாடி நாளும் தொழுவோமே.

பா. அருள்

காரைநகர்

## ஏலமும் ஓலமும்

கொழும்பு நகரில்
பொருட் காட்சி
தெருக்கள் தோறும்
பெருங் காட்சி

இதில்
கொள்ளை மலிவில்
பொருள் வாங்கி
இல்லம் வந்து
மெல்லப் பார்த்தால்

அதில்
நெஞ்சை உருக்கி
வேக வைத்திடும்
உறைந்து போன
துளி இரத்தம்!

—க. நாகராஜா

# இலங்கை ஜனதிபதி உரைக்கு
# தமிழக தினசரிகள் கண்டனம்!

இலங்கைக் கலவரங்களின்போது, ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன டி. வி.யிலும் வானெலியிலும் நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த்தினரல்லவா?

தமிழர்களின் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக ஒரு திட்டத்தைச் சில நாட்களுக்கு முன் அறிவிக்க இருந்ததாகவும் ஆனல் துரதிருஷ்டவசமாக அந்த வட்டமேசை மகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கலந்து கொள்ளவில்லையென்றும் இதனல் பல உரிமைகளைப் பெற தமிழர்கள் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டனரென்றும், பதின்மூன்று இராணுவத்தினர் கொலை செய்யப்பட்டதே இனக்கலவரத்துக்குக் காரணமென்றும் ஜே. ஆர். தனது பேச்சில் குறிப்பிட்டிருந்தார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ன கூறுகிறது தெரியுமா?

''ஜெயவர்த்தன நிகழ்த்திய உரையில் இப்போதைய தாக்குதல்களை நியாயப் படுத்த முனைந்திருப்பதாகத் தோன்றுகிறது. நீண்ட காலமாகவே சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே

தொகுத்துத் தருபவர்:
ஈ. கே. ஆர்.

விரோத உணர்ச்சியும் சந்தேக மனப்பான்மையும் வளர்ந்து விட்டதாகவும் அதுதான் இப்போதைய சம்பவங்களுக்குக் காரணம் என்றும் இலங்கை ஜனதிபதி கூறியிருந்தார். இவ்வித நிலையை இலங்கையில் முடியர்து என்று இந்திரா கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.''

## ✯ தமிழக கவிஞரின் வேதனை:
## ''மூச்சுவிடக்கூட டில்லிக்கு மனுப்போட வேண்டுமே!''

இந்தப் பேச்சுக் குறித்து தமிழ்நாட்டிலிருந்து வரும 'தினமணி', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ்கள் மிகக் கடுமையாகக் கண்டித்துள்ளன

'இலங்கை அதிபரின் விவேகமற்ற பேச்சு' என்று 'தினமணி'யும் 'பொறுப்பற்ற போக்கு' என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடும் ஆசிரிய தலையங்கமும் தீட்டியுள்ளன.

### நிதானமில்லை

'இலங்கையில் இப்போதுள்ள நிலைமையில் அங்குள்ள அரசின் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் சாதுரியத்துடனும் விவேகத்துடனும் நடந்து கொள்வது முக்கியம். ஆனல் இலங்கை மந்திரிகளின் பேச்சுகள் ஆத்திரமூட்டும் வகையில் இருந்தன. இப்போது ஜனதிபதி ஜெயவர்த்தனவின் பேச்சும் எரிகிற நெருப்பில் எண்ணெவை ஊற்றுவதுபோல இருக்கிறது. அவருடைய பேச்சில் நிதானத்தைக் காணேம். ஏற்கனவே உள்ள நிலைமையை மோசமாக்குவதாகவே இருக்கிறது'' இவ்வாறு 'தினமணி' தீட்டியுள்ளது.

—'தினமணி' எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தில் இலங்கையிலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி இலங்கைச் சம்பவங்களுக்குப் பொலிஸாரும் ராணுவமும் உடந்தைதையாக இருப்பதாகத் தெரிவித்து, 'ஜெயவர்த்தன நிலைமையைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டார்! இந்த நிலையில் அவருடைய பேச்சு மேலும் தூபம் போடுவதாக அமைந்திருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலத்தில் ஆட்சி புரிந்த சிங்கள அரசுகள் நிவர்த்தி செய்யத் தவறிவிட்டன. ஜெயவர்த்தன அரசும் தவறிவிட்டது. பிரச்னையின் அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமை தோன்றியிராது.''

இவ்வாறு குறிப்பிட்ட 'எக்ஸ்பிரஸ்' மேலும் சொல்கிறது.

''இலங்கைச் சம்பவங்கள் நம் நாட்டில் உள்ளவர்களிடம் குறிப்பாக தமிழகத்தின் மக்களுக்கு வேதனையையும் கவலையையும் உண்டுபண்ணியிருப்பது நியாயமே! இலங்கைச் சம்பவங்களில் மத்தியஅரசு நிதானத்துடன் நடக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.''

இலங்கைப் பிரச்னை இந்தியாவுக்கு உள்நாட்டு விவகாரமா என்ற கேள்விக்கு 'தினமணி'யில் வந்த ஆசிரியத் தலையங்கத்தில் இந்திராவின் பேச்சை ஆதாரமாகக் காட்டி எழுதியுள்ளது. அதில் ஒரு சிறு பகுதி:

இப்போது இலங்கையில் நடக்கும் சம்பவங்களின் கடுமையைப் பார்க்கும்போது நாம் மௌனமாக இருக்க முடியாது என்ற நிலைமை தோன்றியுள்ளது. அங்கு நடக்கும் சம்பவங்கள் மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களாக இருக்கின்றன. இவைபற்றியெல்லாம் நாம் பேசாமல்வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க

### உணர்ச்சிக் கீதங்கள்

இலங்கையில் கலவரங்கள் நடந்துகொண்டு இருந்தபோது தமிழகத்தில், உணர்ச்சிக் கவிதைகள் பல பிறந்தன. பத்திரிகைகளில் பக்கத்துக்குப் பக்கம் பெட்டி கட்டிப் போட்டார்கள்! மேடைகளில் உணர்ச்சிக்கீதங்களாகஒலித்தன. தமிழகத்தின் பட்டிதொட்டிகள் எல்லாம் ஒரே தமிழ் உணர்ச்சி மயம்— இலங்கைத் தமிழர்களுக்காக—

இந்தச் சமயத்தில்—

தமிழ்நாட்டில் கவியரசு கண்ணதாசன் இல்லையேஎன்று தான் மனம் நொந்தது!

ஆயினும்—

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்காகப் பல கவிஞர்கள் பாடினர்கள்! அத்தனையும் உணர்ச்சிக் கவிதைகள்!

கவிஞர் முத்துராமலிங்கம் குறிப்பிடக்கூடிய கவிஞர்களில் ஒருவர். அவர் கவிதை ஒன்று.

நாம்—
சொந்த வீட்டிலேயே
வாடகைக்கு
வசிப்பவர்கள்;
அதனல்தான்
நம்
சுதந்திரத்துக்குக்
கொஞ்சம்
சுவாசப் பைகளில்
கோளாறு!
ஆம்—
பாலஸ்தீனியர்களுக்காய்
பரிதாபப்படுகிறவர்கள்

## தமிழகத்தின் இதயக் குமுறல் - 14

நெல்சன் மண்டேலாவுக்காய்
நியாயம்
கேட்கிறவர்கள்
இலங்கைத் தமிழனுக்காய்
'ஏன்?' என்று
கேட்கவும்
தயங்குகிருர்களே!
ஈழத்தமிழன்—
வியர்வை தந்தான்!
தேயிலை பிறந்தது
ரத்தம் தந்தான்
ரப்பர் பிறந்தது!
உயிரும் தந்தான்
உணர்ச்சி பிறந்தது
ஓ!...
இந்தியத் தாயே!
இனி அவன்
என்ன தந்தால்
உன்—
இரக்கம் பிறக்கும்...

### பாதங்களை

### முத்தமிடுவேன்

புலவர் புலமைப்பித்தன் இலங்கைத் தமிழர்களுக்காக எழுப்பியுள்ள குரல் பலமாக ஒலிக்கிறது;

''இந்தியத் தமிழகத்தில் கின்ருேடு நான்கே முக்கால் கோடிப்பேர் தமிழர்கள் இருக்எருர்கள்.

''நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரேநேரத்தில் ஓங்கி ஒரு மூச்சுவிட்டால் —

.........

''ஆனல் நாங்கள், கேவலம்—

''மூச்சுவிடுவதற்குக்கூட டில்லிக்கு மனுப்போட்டுத் தான் தீரவேண்டும்.

''அந்தக் குட்டிமணி—

''அந்தத் தங்கத்துரை—

''நான் என்ன சொல்லுவேன் தாயே! அவர்கள் கால்கள் என் கைகளுக்கு எட்டவில்லை!

''எட்டியிருந்தால்—

''அந்தக் கால்களை கவிதை எழுதும் என் கையால் வாரியணைத்து, அந்தப்பாதங்களில் என் முத்தங்களைப் பதியப் போட்டிருப்பேன்!

''ஒருநாள், இலங்கைத் தமிழர்களுக்குவிடுதலை கிடைக்கும்போது—

''டில்லிகூட அப்போது வாழ்த்துப்பத்திரம் அவசர அவசரமாக அச்சடித்து அனுப்பிவைக்கும்!

(இன்னும் வரும்)

## வன்செயலால் பாதிக்கப்பட்ட
## 34 தமிழ்க்கூ பரிசோதகர்களின்
## விண்ணப்பம் நிராகரிப்பு

(பண்டத்தரிப்பு)

கண்டி. பொல்கொல்லைக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பயின்று வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்து வந்துள்ள 34 தமிழ் கூட்டுறவுப் பரிசோதகர்களையும் தவறாது மீண்டும் பயிற்சிக்கு சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் திரு திவாரத்தின கண்டிப்பான உத்தரவொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த 34 தமிழ் கூட்டுறவுப் பரிசோதகர்களும் தமது பயிற்சியை எதிர்வரும் ஜனவரி மாதம்வரை ஒத்திவைக்குமாறு கையொப்பமிட்டு அனுப்பியிருந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## திருநெல்வேலி அநாதைப் பாடசாலைக்கு ரூ. 3 லட்சம்!
### நோர்வே லயன்ஸ் உதவுகிறது

(பண்டத்தரிப்பு)

திருநெல்வேலி முத்துத்தம்பி அநாதைகள் வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைக் கட்டிடங்களை அமைப்பதற்காகநோர்வே நாட்டிலுள்ள தொண்டைம் லயன்ஸ் கழகம் வட்டுக்கோடை லயன்ஸ் கழகத்திற்கு ஊடாக மூன்று இலட்ச ரூபாவை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளது லயன்ஸ் வலயத் தலைவர் திரு இ. விஜயரத்தினம் இந்தபுதிய கட்டிடங்களை நிறுவுவதற்கான வரைபடங்களை தயாரித்து நோர்வே நாட்டின் மேற்படி தொண்டையம் லயன்ஸ் கழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

## வவனியாச் செய்திகள்

நமது நிருபர்

வவனியா, முல்லைத்தீவு அகதிமுகாம்களுக்குச் சர்வோதய இயக்கத்தினர் பல உதவிகளை வழங்கி வருகின்றனர்.

சிறுவர்களுக்கான கல்வி, போஷாக்கு உணவு வகைகள், சுகாதார வசதிகளை இவர்கள் முகாம்களில் செய்துள்ளனர்.

வவனியா, முல்லைத்தீவு முகாம்களில் சர்வோதய வவனியா நிலையத் தொண்டர்கள தங்கியிருந்து அகதிகளுக்கு சேவையாற்றுகின்றனர்.

முல்லைத்தீவிலுள்ள ஐந்து முகாம்களுக்கு நேரில் சென்ற சர்வோதயத்தலைவர் கலாநிதி ஆரியரத்தினவின் மனைவி அங்கு சிறுவர்களுக்கானஉடைகளை அன்பளிப்புச் செய்தார்.

அகதிகளுக்குச் சமையல் பாத்திரங்கள் மற்றும் செலவுகளுக்காக இருபத்தையாயிரம் ரூபாவையும் அவர் வழங்கினர்.

### நல்லின உழுந்துவிதை

வவனியா பகுதியில் உழுந்து பயிரிட விரும்புபவர்கள் நல்லின உழுந்து விதைகளைப் பெற்றுக் கொள்ள தத்தம் பகுதி விவசாயப் போதனசிரியர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் விதைநெல் பெற விரும்புவோர்களும் வவனியாப் பண்ணை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### விவசாயப் பயிற்சி வகுப்பு

வவனியா விவசாய விசாலிப்புப் பிரிவினர் கிராமம் தோறும் விவசாயிகளுக்கு வகுப்புகளை நடாத்தி வருகின்றனர்.

புதிய பயிர்ச்செய்கை முறைகள், அறிமுகம் செய்யப்பட்ட நெல்லினச்செய்கை, தெளிகருவி பாவித்தல், பழுது பார்த்தல், விவசாயப்பொது அறிவு முதலியன இந்தப் பயிற்சி வகுப்பில் போதிக்கப் படும்.

வவனியாவிலுள்ள ஒவ்வொரு விவசாயப் போதனசிரியர் பிரிவிலும் விவசாய விசாலிப்புப்பிரிவு உத்தியோகஸ்தர்கள் குறித்த பயிற்சி வகுப்பினை ஏற்பாடு செய்து வருகின்றனர்.

### நவராத்திரி

வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தினர் வழமை போல இவ்வருடமும் நவராத்திரி விழாவை சிறப்பான்முறையில் நடத்திவருகின்றனர்.

### வெக்கையினல் நோய்

வவனியாவில் வரட்சி நிலவுவதனல் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வவனியா அரசினர் ஆஸ்பத்திரியில் சிறு பிள்ளைகள், நடுத்தர வயதுடையோர், முதியவர்கள் வயிற்றுளைவு நோயினல் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## எரிச்சலும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவர்கள் 1919-ல் அனதொலே பிரான்ஸ் கூறிய இவ்வார்த்தைகளை நினைவுகூரட்டும்: ''எரியுங்கள் எரியுங்கள், வெறுப்பினை விதைக்கும்எல்லா நூல்களையுமே எரியுங்கள்! காட்டுமிராண்டித் தனமான வெற்றிகளைகாலடியில் மிதித்து விட்டு உழைப்பையும் அன்பையும் உயர்த்துங்கள்! இறுகிய தேசியவாதத்தையும் ஏகாதிக்கத்தையும் வளர்க்கும் எல்லா நூல்களையும் எரியுங்கள்!''

நூல் எரிப்பு நோய் உலகின் எமது பகுதியையும் எட்டிப் பார்க்காமல் இல்லை ஹிந்தி-எதிர்ப்பு கிளர்ச்சிக் காலத்தில் பெரியாரின் அடியார்கள் இராமாயண, மஹாபாரதப் பிரதிகளை எரித்துத்தள்ளி தமது 'ஹந்தி எதிர்ப்பினை' உலகறியச் செய்தனர்!

நூல்களை வெறுமனே எரிப்பதால், அவற்றில் அடங்கியுள்ள கருத்துக்கள் எரிந்துவிடாது என்ற உண்மை இந்த 'நூல் எரிப்பாளர்'களுக்குத் தெரியாதிருக்க முடியாது ஜோஸப் அகீபா தமது நூல்கள் எரிக்கப்படுவது கண்டு பின்வருமாறு கூறினர்: ''கடுதாசி எரிகின்றது ஆனல் கருத்துக்கள் வெளியே பறக்கின்றன !''

அமெரிக்காவில் மக்கார்தி சகாப்தத்தில் நூல்-எரிப்பு உக்ரமடைந்திருந்த வேளையில் ஐஸன்ஹவர் இப்படிக் கூறினர். 'நூல் எரிக்கும் கும்பலுடன் சேராதீர்கள்! சத்தியமாய் இருந்தவையின் சாட்சிகளை மறைப்பதன் மூலம் தவறுகளை மறைத்துவிடலாம் என்று எண்ணுதீர்கள்!''

ஆம், எதுதான் உண்மை!

'பெரி'

# எழுதுமட்டுவாள் கொள்ளை வழக்கு: "தங்கராஜா என் தலையில் 3 தடவை அடித்தார்"

## காயமடைந்தவர் சாட்சியம்

(மட்டுவில்)

நள்ளிரவில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு எழுந்து அடுப்படிப் பக்கத்தால், முற்றத்திற்குப் போனேன். அங்கே பலர் பயங்கர ஆயுதங்களுடன் நிற்பதைக் கண்டேன் தங்கராஜா என்பவர், என் தலையில் மூன்றுதடவை அடித்தார் நான் மயங்கிக் கீழே விழுந்தேன். எனக்குத் தங்கராஜாவைத்தவிர மற்றையோரை அடையாளம் காண முடியவில்லை.

எழுதுமட்டுவாள் கொள்ளை தாக்குதல் வழக்கில் சாட்சியமளித்தகாயமடைந்த முருகேசு கூறினார்.

இந்த வழக்கில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த முருகேசு என்பவர் வீட்டில் நள்ளிரவில், பயங்கர ஆயுதங்களுடன் அத்துமீறிச்சென்று முருகேசு என்பவரையும் தாக்கி அவரது மகனையும் தாக்கி காயப்படுத்திவிட்டு சுமார் 41000 ரூபா பெறுமதியான, ஒலிப்பதிவு நாடாவுடன் கூடிய 2 வானொலிப் பெட்டிகள், ஒரு சைக்கிள், ஒரு பவுண் சங்கிலி, இரண்டு சாறிகள், ஒரு ஜிப்சி உட்பட் பலபொருட்களைக் கொள்ளையிட்டதாக, அதே ஊரைச் சேர்ந்த தங்கராஜா என்பவர் மீது சாவகச்சேரி பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு சாவகச்சேரி நீதவான் திரு. என். யோகசிகாமணி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது எதிரி சார்பில் சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் அனுசரணையுடன், சட்டத்தரணி திரு. என். ஸ்ரீசிவாயா ஆஜரானார். கோட்சார்ஜன் திரு. செல்லையா அனுசரணையுடன் சட்டத்தரணி திரு. சி. பாலகிருஷ்ணன் வழக்கை நடத்தினார்.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது: சம்பவதினம் இரவு நான் விறுந்தையில் படுத்திருந்தேன். எனது மனைவி நல்லம்மா, மகள் மஞ்சுளா நடறையில், படுத்திருந்தனர். எனது மகன் சிவநாதன் பக்கத்து அறையில் படுத்திருந்தான். நள்ளிரவு யாரோ கூப்பிடும்சத்தம் கேட்டு எழுந்து மெல்ல அடுப்படியால் முற்றத்திற்குப் போனேன். அடுப்படிப் பக்கத்தில் விளக்கெரிந்து கொண்டிருந்தது.

''அப்பொழுது சிலர் அங்கு கொட்டன் இரும்பு கம்பி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் நின்றுகொண்டிருப்பதைகண்டேன் தங்கராஜா என்பவர் வந்து என் தலையில் அடித்தார். அப்பொழுது நான் கீழே விழுந்தேன். விழுந்தபின் கொட்டனால் அடித்து காலால் உதைத்தார் நான் மயங்கிவிட்டேன். என்னை உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர்கள். என்னுடைய மகனையும் ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். எனக்கு சுய அறிவு மீள இரண்டு மூன்று தினங்களானது.

பொலிசார் என்னிடம் ஆஸ்பத்திரியில் வந்து வாக்குமூலம் பதிவுசெய்தனர். நான் பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுக்கும்போது நல்ல ஞாபகசக்தியுடன் தான் இருந்தேன். எனது மகனும் வாக்குமூலம் கொடுத்தார்.

எதிரிதரப்பு சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையின் போது எதிரிக்கும் தனக்கும் முன்பு வழக்கு நடந்தது என்றும் அந்த வழக்கிலும் இவர் எதிரியாக இருந்தார் என்றும் தான் கதைப்பதில்லை என்றும் கூறினார்.

மேல் விசாரணை இம்மாதம் 17ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

# எதிரி ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதி!

(மட்டுவில்)

எழுதுமட்டுவாள் கொள்ளை வழக்கில், எதிரியை 5000 ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதி வழங்கினர்.

எதிரியைப் பிணையில் விடுமாறு கோரி சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் மனு ஒன்றை நீதவானிடம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து நீதவான் அவரை 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். (க)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரைச்சி லயன்ஸ் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதி மக்களின் நலனில் கரைச்சி லயன்ஸ் கழகம் பெரும் அக்கறை கொண்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் பல ஆக்கபூர்வமானபணிகளை மேற்கொண்ட நாம் தென்னிலங்கையில் இருந்து பாதிக்கப்பட்டுவந்த முன்னூற்குக்கு அதிகமான மக்களுக்கு புகலிடமளித்து பராமரித்தும் வருகிறோம்.''

இவ்வாறு கரைச்சி லயன்ஸ் கழகத்தின் உத்தியோக பூர்வ அங்கீகாரம் வழங்கும் வைபத்தில் தலைமைதாங்கி உரையாற்றுகையில் பிரஸ்த்தாப கழகத்தலைவர் டாக்டர் க. தணிகாசலம் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி ஹோட்டலில் நடைபெற்ற இவ்வைபவத்தில் லயன்ஸ் கழகங்களின் மாவட்ட ஆளுனர் டாக்டர் பாமி. இஸ்மாயில் தம்பதிகள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர். லயன்ஸ் வலையத் தலைவர் சட்டத்தரணி எஸ்! அம்பிகைபாலன் இவ்வைபத்தில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று அறிமுக உரைநிகழ்த்தினர்.

தனது மேற்பார்வையில் இயங்கிய இக்கழகம் குறுகிய காலத்தில் பல பணிகளை மேற்கொண்டதை சட்டத்தரணி அம்பிகைபாலன் வெகுவாகப் பாராட்டினர். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட ஆளுநனர் டாக்டர் பாமி இஸ்மாயில் இக்கழகத்திற்கான உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்கி உறுப்பினர்களிற்கான சான்றிதழ்களை வழங்கினர்.

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழக பிரமுகரும் தொழிலதிபருமான திரு. சிவானந்தன், கிளிநொச்சிபரந்தன் ரேட்டறிக் கழக தலைவர் டாக்டர் எஸ். சிறீதரன், செயலாளர் ப.வை.ஜெயபாலன் யோகு பசுபதி. கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பேரேரா ஆகியோருட்பட பெருந்தொகையானோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர், கரைச்சி லயன்ஸ் கழக செயலாளரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளருமான திரு. நாகேந்திரன் லயன்ஸ் கழக சார்பில் வைபவத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# தாலிக்கொடி வழிப்பறி: நபருக்கு ஒருவருட கடூழியம்!

(புலோலி)

ஆலயதரிசனம் முடித்துக் கொண்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துக்கொண்டோடிய திருடனுக்குப் பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

புலோலிதெற்கு உபகதிர்காமத்தைச் சேர்ந்த திருமதி பேரம்பலம் என்ற பெண் வல்லிபுரஆழ்வார் ஆலயத்திற்குச் சென்று தரிசித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது சுமார் 12,000 ரூபா பெறுமதியான அவரது தாலிக்கொடியைத் திருடன் அறுத்துக்கொண்டோட, பெண்கூக்குரலிடவே திருடன் பற்றைக்குள் பதுங்கிக்கொண்டான். இளைஞர் கூட்டமொன்று அங்குதிரண்டு பற்றைகளுக்குள் தேடுதல் நடாத்தித் தாலிக்கொடியுடன் திருடனைப் பிடித்துப் பருத்தித்துறைப் பொலிசில் ஒப்படைத்தது.

பொலிசார் திருடனைப் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதிபதி திருடனை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பன்னைக் கட்டையைச் சேர்ந்த இரத்தினம் சிவனேசராசா என்ற றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த நபர் மீண்டும் பருத்தித்துறை நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். இவர் முன்பும் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டவர் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

நீதவான் எதிரிக்கு ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (அ)

# புதிய உறுப்பினர் தெரிவு

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீநாகபூசணிஅம்மன் ஆலய அறங்காவலர் சபையின் புதியஉறுப்பினராகத் திரு அ.சண்முகநாதன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போது உறுப்பினராக விருக்கும் திரு வி.சபாநாதனின் பதவிக் காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் முடிவடைவதால் அவரின் இடத்துக்கே இப் புதிய தெரிவு இடம்பெற்றது. புதிய உறுப்பினர் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இருந்து பதவி வகிப்பார். (க)

# "கிராமிய அபிவிருத்தியில் பெண்கள் பங்கு முக்கியம்"

[புலோலி]

''கிராமியகலை, கலாச்சார, பொருளாதார அபிவிருத்தியில் மாதர்களின்பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இதனைக் கருத்திற் கொண்டுமாதர்கள் சிறப்பாக இயங்கவேண்டும். இதற்கு மாதர் சங்கங்கள் வழிவகுக்க வேண்டும்''

இவ்வாறு வதிரி தமிழ் மன்ற மாதர் சங்கத்தின் வருடாந்த இராப்போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் மன்றத்தலைவர் திரு. எம். கிருஸ்ணகாந்தன் குறிப்பிட்டார். மாதர் சங்கத்தலைவி செல்வி சூரியகலா எதிர்வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. கிருஸ்ணகாந்தன் குறிப்பிட்டதாவது,

மாதர்கள் கிராமிய சிறுர்களின் கல்வி வளர்ச்சிக்கு உந்துகோலாக இருப்பதோடு எமது கிராமப்பகுதிகளில் கைத்தொழில் அபிவிருத்திகளிலும் ஈடுபடவேண்டும். மாதர்களுக்குப் பனம்பொருள் உற்பத்தி முயற்சிகளில் பயிற்சியளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்மன்றப் பொதுச் செயலாளர் திரு. கே. எதிர்வீரசிங்கமும் உரையாற்றினர். மாதர்சங்கச்செயலாளர்செல்வி அனுசுயா இரத்தினசபாபதி நன்றியுரை கூறினர்.

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசியலொத்தர் சபையினுல் கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 944வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

**முதலாவது பரிசு**

**10 T 0467**

ரூபா 1, 90, 400

**இரண்டாவது பரிசு**

**14 Z 0763**

ரூபா 71, 400

**மூன்றுவது பரிசு**

**04 Q 0907**

ரூபா 23, 800

ரூபா 856-80 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | |
|---|---|
| 04 A 0314 | 07 A 0309 |
| 16 A 0067 | 20 A 0958 |
| 07 B 0313 | 10 B 0744 |
| 10 B 0933 | 11 B 0531 |
| 15 B 0033 | 18 B 0097 |
| 18 B 0458 | 12 C 0429 |
| 13 C 0030 | 07 D 0455 |
| 09 D 0613 | 12 D 0565 |
| 16 D 0831 | 13 E 0577 |
| 04 F 0913 | 07 F 0530 |
| 09 F 0598 | 02 G 0717 |
| 05 G 0399 | 10 G 0591 |
| 10 G 0850 | 14 G 0965 |
| 15 G 0687 | 03 H 0072 |
| 13 H 0146 | 14 H 0322 |
| 16 J 0508 | 01 K 0265 |
| 01 K 0762 | 06 K 0115 |
| 07 K 0529 | 11 K 0792 |
| 14 K 0681 | 15 L 0290 |
| 19 K 0004 | 16 L 0158 |
| 20 L 0157 | 20 L 0612 |
| 02 M 0983 | 06 M 0110 |
| 12 M 0759 | 14 M 0174 |
| 14 M 0759 | 16 M 0320 |
| 18 M 0903 | 03 N 0864 |
| 06 N 0606 | 06 N 0871 |
| 08 N 0825 | 08 N 0957 |
| 15 N 0206 | 04 O 0930 |
| 09 O 0914 | 18 O 0787 |
| 19 O 0114 | 03 P 0188 |
| 07 P 0505 | 08 P 0874 |
| 16 P 0101 | 16 P 0105 |
| 20 P 0587 | 01 Q 0142 |
| 02 Q 0072 | 03 Q 0585 |
| 04 Q 0944 | 08 Q 0186 |
| 10 Q 0768 | 16 Q 0356 |
| 18 Q 0549 | 04 R 0248 |
| 05 R 0381 | 08 R 0716 |
| 11 R 0633 | 16 R 0974 |
| 04 S 0761 | 09 S 0927 |
| 15 S 0474 | 20 S 0887 |
| 05 T 0517 | 13 T 0499 |
| 10 V 0788 | 02 W 0228 |
| 16 W 0078 | 16 W 0081 |
| 18 W 0390 | 14 X 0941 |
| 20 X 0134 | 01 Y 0383 |
| 03 Y 0365 | 09 Y 0718 |
| 16 Y 0221 | 16 Y 0761 |
| 04 Z 0990 | 06 Z 0109 |
| 09 Z 0654 | 17 Z 0970 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

# ரூபவாஹினியில் இன்று

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள். |
| 6-02 | 'லஸி'-நாய் ஒன்றின் தீரச்செயல்கள் (ஆங்கிலம்) |
| 6-30 | எ. பி. ஸி. சிறுவர் நிகழ்ச்சி(ஆங்கிலம்) |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-15 | விளையாட்டுப் பயிற்சி |
| 7-30 | 5000 வருடகால கொரியக்கலை |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8 30 | குறுந்திரைப்படம் (சிங்களம்) |
| 9-00 | சிங்கள நிகழ்ச்சி |
| 9-30 | செய்திகள்(ஆங்கிலம்) |
| 9-50 | 'ஹவாய் 5ஓ'- துப்பறியும் தொடர்ச் சித்திரம் (ஆங்கிலம்) |
| 10-40 | நிகழ்ச்சிகள் முடிவு. |

# அம்பனில் நடந்த மரம் நாட்டு விழா

[புலோலி)

பருத்தித்துறைத் தொகுதி அம்பன் கமநலச் சேவை நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கிணற்றுப்பாவனை ஆரம்பமும் மரம் நரட்டுவிழாவும் நடைபெற்றது.

யாழ் கமநலச் சேவை உதவி ஆணையாளர் திரு கே.பரமலிங்கம் வடமராட்சி வடக்குக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு வை.வேலும்மயிலும் ஆகியோர் புதிய கிணற்றுப் பாவனையையும் மரம் நாட்டு விழாவையும் ஆரம்பித்து வைத்தனர்.

பெரும்பாக உத்தியோகத்தர் திரு எஸ்.பரமசிவராசா, அம்பன் விவசாயப் போதனுசிரியை திருமதி தனவதி. கந்தசாமி பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் ரீ. கதிரவேற்பிள்ளை, ஆகியோர் உட்பட கமநலச் சேவை நிலைய இயக்குநர்சபை உறுப்பினர்கள் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

# தலைவராக தெரிவு

(புலோலி)

வதிரிதமிழ் மன்றம், வதிரி டயமன்டவிளையாட்டுக்கழகம், வட்டுவத்தைச்சனசமூக நிலையம் என்பனவற்றின் தலைவராத திரு. எம். கிருஷ்ணகாந்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

உபதலைவர்களாக திரு. ரீ. இரத்தினசிங்கம், ஆகியோரும் பொதுச்செயலாளராக திரு. கே.எதிர்வீரசிங்கமும், நிர்வாக செயலாளராக திரு. வி. தயானந்தாவும், பொருளாளராக திரு. எஸ். மகேந்திரனும் கணக்குப்பரிசோதகர்களாக திரு. ரி.துரைராஜசிங்கம் திரு. வி. அமிர்தலிங்கம் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக திரு. ஏ. மகாதேவன், திரு. எஸ். தங்கராசா, திரு. எம். லஷ்மிகாந்தன், திரு. ரி. குணுளன், திரு. கி. சுந்தரராசன், ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

லதா (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். -லதா
நவரத்தினம்

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
சகலகலா வல்லவன்

ராஜா [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
[கலர்]

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா
தங்கவேலு, நம்பியார்
நம் நாடு (கலர்)

சாந்தி யாழ்நகர்
10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
உத்தமன்
(புதிய பிரதி)

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
Sean Connery
Jene Hackman in
The Bridge Too Far
(War Film)
From 12-10-83 to 14-10-83
NORTH SEA HIJACK

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Bruce Lee in
ENTER THE DRAGON
Limited Engagement
For the last time in Jaffna
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்
சில தினங்கள் மட்டும்
யாழ். நகரில் கடைசி
தடவையாகத் திரையிடப்படுகிறது.
Next :
IT COULD HAPPEN TO YOU
(A Film on V. D.)

லிடோ (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
விடியும்வரை காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
சிவாஜி - சாவித்திரி
கர்ணன்
(கலர்-புதியபிரதி)
From 12-10-83
ESCAPE FROM ALCATRAZ

# மன்னார் செய்திகள்

## பொதுமக்கள் கஷ்டம்

மன்னார் பட்டின குடிநீர்விநியோகம் அடிக்கடி சீர்குலைந்து வருவதால் பொதுமக்கள் கஷ்டங்களை, அனுபவித்து வருகின்றனர்

## மின்சார விநியோகம்

பேசாலைப்பகுதிக்கு 24மணி நேரமும் தொடர்ச்சியாக மின்சார விநியோகம் வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை மின்சார அத்தியட்சகர் திரு. எஸ். கணேசன், பேசாலை உப அலுவலக குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கே. கிருஷ்ணராஜா ஆகியோர் இணைந்து மேற்கொண்டுவருகின்றனர்.

## சுய உதவி வேலை வாய்ப்பு

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் கிராமிய மட்டத்தில் பெண்களுக்கு சுயஉதவி வேலைவாய்ப்புவசதி ஏற்படுத்திக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் எருக்கலம்பிட்டி, வங்காலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மகளிர் பணியக உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும். ஒருவருக்கு திட்டமிடல் அமைச்சினால் 5ஆடுகள் வழங்கப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் ஆடுகளை கட்டிவளர்ப்பதற்கான தொழுவங்களைசுயஉதவி வேலைவாய்ப்பு வசதிதிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களே அமைக்கவேண்டும்.

இத்துடன்ஆடுகளுக்குவேண்டிய உணவுகளை வழங்கும் பொருட்டு இப்பில் இப்பில் மரங்களையும் வளர்க்க வேண்டும்.

## வறட்சி நிவாரண உதவி நிறுத்தம்

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வறட்சிநிவாரண உதவிகள்யாவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஒருமாத காலம் மட்டும் மேற்கொள்ளப்பட்ட இவ்வறட்சி நிவாரண உதவிகள் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்வறட்சி நிவாரணத்தின் போது 7லட்சம் ரூபா பணமும் 7 லட்சம் ரூபா உணவுமுத்திரையும் வழங்கப்பட்டது.

## செஞ்சிலுவைச் சங்கம் உதவி

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு மன்னார்மாவட்டத்திற்கு வந்துள்ள அகதிகளுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தமது உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கு வந்திருந்த இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் அதிகாரிகள் பேசாலை, முருங்கன் ஜீவோதயம், கீரிசுட்டான், மடு, நானாட்டான் ஆகிய முகாம்களுக்குச் சென்று அகதிகளுக்கு உடை, பால்மா போன்றஅத்தியாவசியப் பொருட்களை நேரடியாக வழங்கினார்கள்.

## தமிழிலும் விண்ணப்பிக்கலாம்

மீன்பிடி வள்ளங்களுக்குப் பயன்படுத்தப்படும் வெளி இணைப்பு இயந்திரங்களை மானிய அடிப்படையில் பெறுவதற்கு தமிழிலும் விண்ணப்பிக்கலாம்.

இவ் விண்ணப்பத்திற்கான விதிகள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் தற்போது தமிழிலும்வெளியிடப்பட்டுள்ளது.

## இணைப்பு அதிகாரி மன்னார் விஜயம்

மன்னார் மாவட்ட இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள கேர்ணல் ரூபசிங்கா மன்னார் மாவட்டத்திற்கு விஜயம்செய்தார்.

இவர் மன்னார் தலைமன்னார் முருங்கன் ஆகியபொலிஸ் நிலையங்களுக்குச் சென்று பாதுகாப்பு நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டார்.

## பாலாவி வற்றியது

தற்போது நிலவிவரும் கடும் வரட்சியினால் திருக்கேதீச்வரம் பாலாவிக்குளம் வற்றிவிட்டது.

அதனால் திருக்கேதீச்வரத்திற்கு வரும் யாத்திரீகர்கள் பல சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

## வீட்டில் ஒருவருக்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அந்தத் திட்டங்கள் வெற்றிநடை போடுகிறது.

## வேலை இல்லாதவர்கள்

நாட்டில் ஏறத்தாழ 15 லட்சம் பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இப்போது படிப்பவர்கள் படிப்பு முடிந்து வந்தால் மேலும் 20 லட்சம் பேர் சேர்ந்து விடுவார்கள்.

தொழில் வளர்க்க தொழிற்சாலைகள் பெருக கிராமத் தொழில்கள் பரவலாக்கப்பட முந்தைய ஆட்சியினர் நடவடிக்கை எடுத்து இருந்தால் இன்று வேலை இல்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு இருக்கவே செய்யாது.

அதைவிட்டுவிட்டு இப்போது வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகி விட்டது அதற்குக் காரணம் இந்தஅரசு தான் என்று குறைகூறுகிறார்கள்.

தடைசெய்யப்படுமா?
ரீகல் (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
Dogs of War
WAR FILM—COLOR
இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாகி வெளியேற்றப்படும் அவன் சில நண்பர்களைச் சேர்த்து, நவீன ஆயுதங்களையும் சேகரித்து இராணுவ முகாமையே நிர்மூலமாக்குகிறான்.

## யாழ். லயன்ஸ் சாட்டர் வைபவம்

(பண்டத்தரிப்பு)

யாழ். லயன்ஸ் கழகத்தின் 10 ஆவது வருடாந்த சாட்டர் வைபவம் இம்மாதம்23ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறவுள்ளது.

முன்னைநாள் மாவட்ட ஆளுநர் டாக்டர் பேர்டினன்ட் பிரதம அதிதியாக இவ் வைபவத்தில் கலந்துகொள்வார். 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு சமூக நலத்திட்டங்கள் அன்றைய தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது

## வலி தென் மேற்கு அகதிகள் உதவி

(பண்டத்தரிப்பு)

கலவரங்களினால் இடம்பெயர்ந்து வலிதென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள அகதிகளுக்கு 4வது கட்ட இலவச உணவுப்பொருட்களை அடுத்தவாரம் வழங்குவதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றது

இப்பகுதியைச் சேர்ந்தகிராம சேவை அலுவலர்களும், விசேட சேவை அலுவலர்களும் இதற்கான பட்டியல்களைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். (அ)

# இன்றைய பலன்

புரட்டாதி 25-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(11-10-83)

மேடம்: பணத்தை அள்ளி வீசினாலும் பலன் மட்டாகத் தான் இருக்கும் சகதொழிலாளர்களுடன் மோதல்களை ஏற்படுத்தும் புனைந்துரைகளினால் மனதுபுண்படும் பொறுமையைப் பேணவும்.

இடபம்: வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாகக் காட்சியளிக்கும் இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் செல்லப்படும் சுற்றுலாவை மேற்கொள்ள விரும்புவீர் தனிச் சிறப்புக்கும் இடமுண்டு.

மிதுனம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும்அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்தவும் சிலருக்கு நூதன ரோகம் தென்படும்.

கடகம்: சகோதரபாசம் தலை தூக்கி நிற்கும் பிதாவழிச் சுகமும் கிடைக்கும் கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு முதியவர் ஒருவரின் அறிவுரை முன்னேற்றத்தைக் குறிக்கும்.

சிங்கம்: இதயங்கள் இணைவதற்கு இன்றுநல்ல நாள்பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் இனபந்துக்களின் ஆதரவுண்டு ஓவியர்களும் கலைஞர்களும் புகழடைவர்.

கன்னி; விளையாட்டுப்பிள்ளையாக இருக்க விரும்புவீர்உமது விசித்திரப் போக்கு மற்றவர்களுக்கு வேடிக்கையைத் தரும் சமயோசித புத்தியினால்நன்மை அடைவீர் இன்று நீர் கவலையில்லாத மனிதன்.

துலாம்: தூரதேச வாசம் துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்திற்கும் இடமுண்டு ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம்வேண்டும் பெண்களுடன் பழகுவதைக் குறைக்கவும்.

விருச்சிகம்: பாதையில் பழுதுண்டு பகைவர்கள் காத்திருப்பர் செலவுகள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும் மனக்கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும்.

தனு: கன்னல் போல் இனிக்கும்வாழ்க்கை காதலில்வெற்றியுண்டு பசுமையான நினைவு ஒன்று தலைதூக்கும் அறிஞர்களின் சந்திப்பு நிகழும் அறவழியில் ஆர்வம் பிறக்கும்.

மகரம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம் வேண்டாத விவாதங்களால் வீண் பெயர் கேட்க நேரிடும் கலகச் செய்திக்கும் இடமுண்டு நிதியில் நெருக்கடி தோன்றி காதலில் பிரிவுண்டாகும்.

கும்பம்: வசதிகள் பெருகும் செல்வாக்குப் பெருகும் வாக்குப் படைத்தவர்களின்ஆதரவு கிடைக்கும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்குக் கிடைக்கலாம்.

மீனம்: எதிர்காலம் பிரகாசமடைய இன்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் தொழில் துறையில் மனதுக்கு ஏற்ற வண்ணம் மாற்றங்கள் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## "இளைஞர்கள் சுயதொழில்களை ஆரம்பிக்க தேசிய இளைஞர் சங்கம் ஆதரவுகளை வழங்கும்!"

[புலோலி]

"இளைஞர்களும் யுவதிகளும் சுயதொழில்களை ஆரம்பிக்கவும் ஆரம்பிக்கப்பட்ட சுயதொழில் முயற்சிகளைத் தொடர்ந்து நடாத்துவதற்கும் தேசிய இளைஞர் கூட்டுறவுச் சங்கம் இளைஞர்களுக்கும் யுவதிகளும் தேசிய இளைஞர் கூட்டுறவுச் சங்கத்தின் உதவிகளைப் பெற்றுத்தாம் வருவாயைப் பெற்றுக் கொள்வதுடன் தமது பகுதிகளின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த வேண்டும்,

இவ்வாறு மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மாதர் சங்கக்கூட்டத்தில் உரையாற்றிய காங்கேசன்துறை இளைஞர் சேவைமன்ற அதிகாரி திரு. வே. விவேகானந்தன் குறிப்பிட்டார். மாதர்சங்கத் தலைவி திருமதி அ. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு. விவேகானந்தன் குறிப்பிட்டதாவது.

விவசாயம், கோழிவளர்ப்பு வியாபாரம் போன்ற சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடவிரும்பும் இளைஞர் யுவதிகள் தேசிய இளைஞர் கூட்டுறவுச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்தால் அவர்களது சுயதொழில் முயற்சிகளுக்கு வேண்டிய உதவிகளை தேசிய இளைஞர் கூட்டுறவுச்சங்கம் வழங்கும். இதுபோன்ற உதவிகளைப் பெற்று நாம் நன்மையடைவதுடன் எமது பகுதிகளின் பொருளாதாரவளத்தை மேம்படுத்துவதற்கும் நாம்பின் நிற்கக் கூடாது.

## கழிவு தண்டவாளங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

(மன்னார்)

பாவிக்க முடியாத நிலையில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ரயில்பாதைக்குப் பயன்படுத்தப்படும் இரும்புத் தண்டவாளங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இதற்கு முன்னோடியாக ரயில் பாதைகளின் அருகில் பாவிக்க முடியாத நிலையில் ஏற்கனவே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இரும்புத் தண்டவாளங்களை (கேடர்கள்) ரயில்வே திணைக்களம் சேகரித்து வருகிறது.

பாவிக்கமுடியாத நிலையிலுள்ள தண்டவாளங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் பெரும் தொகையான பணம் ரயில்வே திணைக்களத்திற்கு வருவாயாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (ச]

## 'திரிபோஷ...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யாத நிலையில் யாழ். சுகாதாரப் பகுதியினர் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

யாழ். மாவட்டத்தில் இந்த மா விநியோகத்தை தொடர்ந்தும் நடைபெறச் செய்வதற்கான மாற்று ஒழுங்குகளை அரசாங்கம் விரைவில் மேற்கொள்ள வேண்டுமென்றும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

## கசிப்பு வேட்டை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனை செய்த மூவர் திடீர் பரிசோதனை நடாத்திய காங்கேசன்துறைப் பொலிசாரிடம் அகப்பட்டுக் கொண்டனர். அத்துடன் கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபர் ஒருவரையும் கைது செய்ததுடன் உபகரணங்களையும் பொலிசார் கைப்பற்றினார்கள்.

# "இளைஞர்கள் தமது பிரச்னைகளை வன்முறையால் தீர்க்கக் கூடாது!"

## கிழக்குப்பிராந்திய புதிய டி. ஐ. ஜி.

(மட்டக்களப்பு)

'இளைஞர்களின் பிரச்னைகள் நியாயமானவையாக இருந்தாலும், அப்பிரச்னைகளைத் தீர்க்க அவர்கள் வன்முறைகளை நாடக் கூடாது' என்று கிழக்குப் பிராந்திய புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா நேற்று மட்டக்களப்பிலுள்ள தமது காரியாலயத்தில் பத்திரிகையாளர்கள் மகாநாடொன்றை நடத்தினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. விக்கிரமசூரியாமேலும் கூறியதாவது: 'இளைஞர்கள் தமது பிரச்னைகள் நியாயமானவையாக விருந்தாலும், அவற்றைத் தீர்க்க வன்முறைகளை நாடக் கூடாது வன்முறைகளால் பிரச்னைகளுக்கு தீர்வுகளை நாட முனைவதைக் கைவிட்டு சமாதான வழிகளில் அப்பிரச்னைகளைத் தீர்க்க முன்வரவேண்டும்.

வன்முறைகளில் இறங்கிய இளைஞர்கள் தமது தவறான போக்கைக் கைவிட வேண்டும். வழிதவறிய இளைஞர்கள் திருந்தி நடப்பதற்கு காலங்கடந்து விடவில்லை' என்றார்.

### பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு

பொலிஸ் பொதுமக்கள் உறவு பற்றி அவர் தெரிவித்ததாவது: ''பொலிஸாரிடம் குற்றச் செயல்கள் அனைத்தையும் கண்டுபிடித்து குற்றவாளிகளை சட்டத்தின்முன் கொண்டுவரும் தெய்வீகத்தன்மை இல்லை. பொதுமக்களும் அவர்களுக்கு உதவியளித்தால் மட்டுமே குற்றச் செயல்களில் குதிப்பவர்களையும், குற்றச் சம்பவங்களையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அத்தியட்சகராக நான் இருந்த போது அங்கு பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்களை ஆரம்பித்தேன். அக் குழுக்களின் மூலமாக சிறந்த பலனைப் பெறக்கூடியதாக விருந்தது. பொதுமக்கள்பொலிஸாருடன் ஒற்றுமையாகவும் நற்புறவுடனும் நடந்து குற்றச் செயல்களைக் குறைக்க உதவினார்கள்.

அவை போன்ற பொதுமக்கள் பொலிஸ் நல்லுறவுக் குழுக்களை கிழக்கு மாகாணத்திலும் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளேன். வடக்கில்கிடைத்த வெற்றி இங்கும் கிடைக்குமென எதிர்பார்க்கிறேன்' என்றார்.

### அம்பாறை சிறை

மட்டக்களப்பில் கைதாகுபவர்களும், தண்டிக்கப்படுபவர்களும் அம்பாறைச் சிறைச் சாலைக்கே கொண்டு செல்லப் படுகின்றனர். இதுபற்றி அவரிடம் கேட்ட போது, 'அம்பாறைக்கு மட்டுநகர் கைதிகள் கொண்டு செல்வதன் நோக்கம், அங்கு கூடுதலான பாதுகாப்பு கிடைப்பதே. மட்டக்களப்புச் சிறைச்சாலை உடைப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தே இவ்வாறு கைதிகள் அம்பாறை கொண்டு செல்லப்படுகின்றனர். அங்கு கைதிகளுக்கு எதுவித அசம்பாவிதங்களும் நடக்கமாட்டாதென்பதை உறுதியாகக் கூறுகிறேன்' என்றார். (கி)

# இப்படியும் நடக்கிறது

இலங்கைத் தமிழர் பிரச்னையில் தீவிர அக்கறை செலுத்தி வரும் தமிழக இளைஞர்கள், அங்கு புதுமையான முறையில் 'போராட்டங்களை' நடத்தி வருகின்றனர்.

இவற்றில் கடைசியாக அரங்கேறியிருப்பது — 'தூங்கும் கிளர்ச்சி'!

இலங்கைச் சம்பவங்கள் குறித்து மத்திய அரசு தூங்குவதாக கண்டனம் கூறும் இந்த இளைஞர்கள், சந்தடிமிகுந்த பஸ் நிலையத்தில் படுத்துத்தூங்குவதன்மூலம் தங்கள் அதிருப்தியை மத்திய அரசுக்கு காட்டிவருகின்றனர்.

கோயம்புத்தூருக்கு அருகே பெதப்பம்பட்டி பஸ் நிலையத்தில் திரு. நாராயணசுவாமி நாயுடுவின் இந்திய விவசாயிகள், உழைப்பாளிகள் கட்சியைச் சேர்ந்த 25 ஊழியர்கள், இளைஞர்கள், திரு. வேணுகோபால் தலைமையில் மேற்படி நூதன கண்டனக் கிளர்ச்சியை நடத்தினர் எப்படித் தெரியுமா?

இரவு எட்டு மணிமுதல் அதிகாலை நான்கு மணிவரை மேற்படி இளைஞர்கள் பஸ் நிலையத்தின் தரையில் தூங்கி இக்கிளர்ச்சியை நடத்தினார்கள். இவர்கள் அருகே இலங்கை அரசையும்,இந்தியமத்தியஅரசின் தூக்கத்தையும்கண்டிக்கும் சுலோக அட்டைகள் பல காணப்பட்டன.

— ஊடுருவி

# "17 புதிய தாதிமார்களை யாழ். நகரில் கடமையாற்ற அனுமதிக்க வேண்டும்"

## அ. பொ. தாதிய சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரித் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் புதிதாகச் சித்தியடைந்த 48 பொதுத்தாதிய உத்தியோகத்தர்களில் 33 தாதிமார்களுக்குக் கடந்த 3-ம் திகதி தொடக்கம் வேலைவழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் வெளிமாவட்டங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு நியமிக்கப்பட்ட 20 தாதிமார்களில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் 10 பேருக்கும் கண்டி ஆஸ்பத்திரியில் 7 பேருக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது,

இன்றைய சூழ்நிலையில் கொழும்பு, கண்டி ஆஸ்பத்திரியில் கடமையாற்றுவதற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ள 17 தாதிமார்களும் பாதுகாப்பின்மை, உணவு வசதிக் குறைவு, போக்குவரத்துவசதியின்மை காரணங்களால்அங்கு கடமையாற்ற முடியாதிருப்பதாகச் சுகாதார அமைச்சுக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும் மகஜர் ஒன்றை அரசாங்கப் பொதுத் தாதிய உத்தியோகத்தர் சங்கத் தலைவர் திரு. என். மயில்வாகனம், செயலாளர் திரு. தி. கதிர்காமதாஸும் அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மகஜரில் யாழ், மாவட்ட சுகாதாரக்கண்காணிப்பாளர் பிரிவிலுள்ள ஆஸ்பத்திரிகளில் 181 தாதிமார் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதென்றும், இதில் யாழ். ஆஸ்பத்திரியில் மட்டும் 150 தாதிமார்களுக்குமேல் அவசியம் தேவைப்படுகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்டுள்ள அதிதீவிர சிகிச்சை நிலையம் இயங்காதற்கும், சத்திரசிகிச்சைப்பிரிவின் 2ம் பகுதி திறக்கப்படாததற்கும் தாதிமார் நியமிக்படாமையும் ஒரு முக்கிய காரணம் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# கொல்லங்கலட்டியில் கைவிடப்பட்ட நிலையில் 'மினி லொறி'!

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தை அடுத்த கொல்லங்கலட்டி மடத்தடி சந்திக்கு அருகாமையில் ஒரு 'மினி' லொறி ஒன்று கைவிடப்பட்டநிலையில் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு கைவிடப்பட்டதாகக் கருதப்படும் இந்த லொறி பொலிசாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து கைப்பற்றப்பட்டது.

இந்த 'மினி' லொறியை காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஆர். எஸ் ஜெயபாலன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி கைப்பற்றி விசாரணை நடத்தி வருகிறது.

இது பளை புலோப்பளையைச் சேர்ந்த லொறி என விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

### விமானம் தாளப்பறந்து கண்காணிப்பு

இதேவேளையில் நேற்றுமுன்தினம் விமானப் படையின் ஹெலிக்கொப்டர் விமானம் ஒன்று மாவிட்டபுரம், காங்கேசன்துறை பகுதியில் தாளப் பறந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

# 3-வது கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி - தோல்வி இல்லை!

(நாக்பூர்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியும் வெற்றி-தோல்வின்றி முடிந்தது.

நேற்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 262 ஓட்டங்களை எடுத்ததும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் சுனில் கவஸ்கர் 64 ஓட்டங்களுடன் ஆட்டமிளந்தார். பாகிஸ்தான் 2-வது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதிவரை ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 42 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முதலாவது இன்னிங்ஸில் இந்தியா 245 ஓட்டங்களையும், பாகிஸ்தான் 322 ஓட்டங்களையும் எடுத்திருந்தது.

இரு கோஷ்டிகளுக்குமிடையே நடந்த 3 போட்டிகளும் வெற்றி-தோல்வியின்றி முடிந்தது குறிப்பிடத்தக்கது. (கு)

# இருவர் கைதாகி விடுதலை

(நயினாதீவு)

செட்டிகுளத்தில் நடைபெற்ற பஸ் தீவைப்புச் சம்பவம் தொடர்பாக நயினாதீவைச் சேர்ந்த இருவாலிபர்கள்வவனியாப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுதலைசெய்யப்பட்டனர்

நயினாதீவைச்சேர்ந்த தவகுக தாசலிங்கம் ஜெயராசசிங்கம் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஜெயராசசிங்கம் உடன் விடுதலைசெய்யப்பட்டார். தவகுகதாசலிங்கம் தமது அலுவலகமான வவனியாப் பிராந்திய இ. போ. ச. காரியாலயத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார் இவருக்கு இப்போது வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (க)

# சற்பிரசாத விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பத்திமாமாதா ஆலயத்தில் 40 பிள்ளைகளுக்கு முதற்சற்பிரசாத விழா 12ம் திகதி நாளை புதன்கிழமையன்று நடைபெறவுள்ளது. பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட் திரு. ஜெயக்குமார் அடிகளார் இவ்வைபவத்தை நடாத்தி வைப்பார்.

# உள்ளூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐயாத்துரை என்பவரின் கடையில் 1000 ரூபாவும் இரு கைக்கடிகாரங்களும் துப்பாக்கி முனையில் கொள்ளை அடித்ததுடன் அவ்வீதியால் வந்து கொண்டிருந்த கே. ராஜலிங்கம் என்பவரை துப்பாக்கியால் சுட்டு கொலைசெய்ய எத்தனித்ததாகவும்; ஆகஸ்ட் 24ம் திகதி இரவு நாவற்குழி கண்டி வீதியிலுள்ள ஏ. ரட்ணராஜா என்பவரது வீட்டில் துப்பாக்கிமுனையில் 41,675 ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளைஅடித்ததாக யாழ். பொலிசிலும், சாவகச்சேரிப் பொலிசிலும் புகார் செய்யப்பட்டிருந்தது.

இக்கொள்ளைகள், கொலை முயற்சி சம்பவங்கள் தொடர்பாக விசாரணைமேற்கொண்ட யாழ். குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் ஏற்கனவே மூன்று சந்தேகநபர்களை கைதுசெய்து விசாரணையின் பின்னர் சாவகச்சேரிப்பொலிசில் ஒப்படைத்திருந்தனர். இவர்களின் விசாரணைகளைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் திரு. சிறிதரன், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் எஸ். ஜோர்ஜ், சின்னத்துரை, கனகலிங்கம் ஆகியோர் கொட்டடிச்சந்தியில் வைத்து மேற்குறிப்பிட்ட நபரைக் கைது செய்து விசாரணையின்பின் சாவகச்சேரிப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். (மா)

# பர்மா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னோர் தொகை 20 ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்திருந்தவர்களில் மற்றுமொருவர் நேற்றுமாலை காலமானார்.

மரணமான தென்-கொரியர்களின் மரணச்சடங்குகளுக்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆயுதப் படையினர் தொடர்ந்து உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (கு)

# சிறிலங்கா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவருடன் 'ஈழநாடு' நேற்றிரவு தொடர்பு கொண்ட போது ''கட்சி அலுவலகம் இழுத்து மூடப்பட்டதற்குக் காரணம் கட்டிடத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதே'' என்று கூறினார். ஆனாலும் கட்சி இழுபறிகளை நீக்கவே அலுவலகம் திடீரென மூடப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

## ராஜசூரியர் வான்மீது தாக்குதல்;

# சந்தேகநபர்கள் மூவரும் அடையாளம் காணப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

ராஜசூரியரின் வானைச்சேதப்படுத்தியது தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில் 3 சந்தேக நபர்களும் அடையாளம் காட்டப்பட்டனர்.

யாழ். நீதிமன்றத்தில் பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நேற்றுக் காலை இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

சந்தேகநபர்கள் மூடிமறைக்கப்பட்ட வாகனத்தில் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜசூரியரின் காரைச் சேதப்படுத்தியது தொடர்பாக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு, றிமாண்டில் வைக்கப்பட்டு நேற்று நீதிமன்றம் கொண்டுவரப்பட்டனர்.

சந்தேக நபர்களான எஸ். ஜெயகாந்தன், எஸ். ஞானறஞ்சன், ஜே. சாந்தன் ஆகியோரைசாட்சிகளான ஜெரூட் ராஜசூரியர், ரவீந்திரன் ஜோசப் ஆகியோர் அடையாளம், காட்டினர்.

வானை அடித்து உடைத்ததைக் காணவில்லை என்றும் அச்சம்பவம் தொடர்பான மோட்டார் சைக்கிளை எடுக்க வந்தவர்களையே அடையாளம் காட்டுவதாகவும் சாட்சிகள் இருவரும் அணிவகுப்பின்போது தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் மூவரும், யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஏ. பி. தங்கநாதன், ஆர். எம். இமாம், பி. தனபாலன் ஆகியோர் ஆஜரானார்கள். வழக்காளி தரப்பில் சட்டத்தரணிகள் ஆர். பி.சபாரத்தினம், செல்வி மல்லிகா ஜோசப், செல்வி விஜயா சிதம்பரநாதன் ஆகியோர் ஆஜரானார்கள். நீதவான் சந்தேகநபர்களை இம் மாதம் 24-ம் தேதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram, Eelanadu, Telephone, 22389—24126.